# தமிழ்ப் பொழில்

தஞ்சைக் கரந்தைத் தமிழ்ச் சங்கத் திங்கள் வெளியீடு

| துணர் | திருவள்ளுவர் யாண்டு ௲௯௮௯ | மலர் |
|---|---|---|
| | விளம்பி, தை | |
| ௩௪ | 1959 சனவரி, பிப்ரவரி. | ௰ |


## வஞ்சிக்காண்டம்.

மது. ச. விமலானந்தம், எம். ஏ.,
(அரசர் சரபோசி கல்லூரி, தஞ்சாவூர்.)

செந்தமிழ்ச் சிலம்பாம் சிலப்பதிகாரம் சிக்கல்கள் பலவுடைத்து. காப்பியத்தின் முதற்கண் அமைந்துள்ள பதிகம் இளங்கோவடிகளால் தான் இயற்றப்பட்டதா? அன்றிச் சாத்தனுர் போன்ற வேறொருவரால் எழுதிச் சேர்க்கப்பெற்றதா? சிலப்பதிகாரத்தின்கண் அமைந்துள்ள வெண்பாக்களின் ஆசிரியர் யார்? கவுந்தியடிகள் காப்பியத்திற்கு வேண்டாதிருக்க அவரையும் ஒரு பாத்திரமாகப் படைத்ததேன்? உண்மையிலேயே பாண்டிய மன்னன் பழியுடையனு? அல்லனு? புகார்க் காண்டம், மதுரைக் காண்டம், வஞ்சிக் காண்டம் எனப் பெயரிடுவானேன்? இளங்கோவடிகள் செங்குட்டுவன் தம்பிதானு? என்பன போன்ற சிக்கல்கள் பலவுள. அம்முறையில் அமைந்ததே வஞ்சிக்காண்டமும்: வஞ்சிக்காண்டமும் இளங்கோவடிகளால்தான் எழுதப்பெற்றதா? அல்லது பின்னர் வந்த ஒருவரால் எழுதிச் சேர்க்கப்பெற்றதா? என்பது ஒரு தீர்க்கமுடியாத 'சர்ச்சை' யாகும். இதனை ஆய்வதே இக்கட்டுரையின் நோக்கம்.

கண்ணகியின் கதைதான் மதுரைக் காண்டத்தோடு முடிந்துவிட்டதே; பின்னரும் வஞ்சிக் காண்டத்தை அமைப்பானேன் என்பதே வஞ்சிக் காண்டம் பற்றிய சிக்கல் வளரக் காரணமாகும். ஒன்று இளங்கோவடிகளின் பின்னர் வந்த யாரோ ஒருவரால் எழுதிச் சேர்க்கப்பட்டிருத்தல்வேண்டும் அல்லது இளங்கோவடிகளே தன் குலப்பெருமைகூற இவ் வஞ்சிக்காண்டத்தை வரைந்திருக்க வேண்டும் என்று கருதுகின்றனர் சிலர். உண்மை இரண்டிலும் அமைந்திலது. இரண்டிற்கும் இடையே அமைந்துளது. அஃதாவது வஞ்சிக்காண்டம் இளங்கோவடிகளால்தான் இயற்றப்பட்டது; காப்பியத்தின் இன்றியமையாமைபற்றி இயற்றப்பட்டதேயன்றி, தன் குலப் பெருமை பேசமட்டும் எழுந்ததன்று என்பதாகும். சிக்கல் கண்டோம்; சிக்கல் தீரும் வழி காண்போம்:

1. கதை சொல்ல எழுந்ததன்று இக்காப்பியம். கண்ணகியின் கதையை ஒருவாயிலாகக் கொண்டு தமிழக வரலாற்றை வளமுடன் பேசும் பெருங் காப்பியமாகையால் வஞ்சிக் காண்டம் அமைவதாயிற்று. சோழ நாட்டையும், பாண்டிய நாட்டையும், பாங்குறப்

பாடிப் பரவிய இளங்கோ சேர நாட்டையும் சிறப்புறச் சித்தரித்தாலன்றே தமிழகத்தையே முழுதும் சிறப்பித்ததாகும். எனவேதான் தமிழ் வரலாற்றுக் காப்பியமாம் சிலப்பதிகாரம் மூன்றுநாடு பற்றியும் முழக்குவதாயிற்று. இதனாலன்றே தமிழுக்குக் கலைக்கோயில் கட்டிய கம்பனையும், தமிழனுக்கு ஒளிநெறி காட்டிய தெள்ளுதமிழ் வள்ளுவனையும், தமிழகம் தழைக்க, தமிழகப் பெருமைபேசிய இளங்கோவையும்; தமிழ், தமிழினம், தமிழகம் என்ற மூன்றனுக்கும் சிறப்புத் தந்த மூவரையும்; முறையே

"யாமறிந்த புலவரிலே கம்பனைப்போல்
வள்ளுவர்போல் இளங்கோவைப்போல்
பூமிதனில் யாங்கணுமே பிறந்ததில்லை, உண்மை
வெறும் புகழ்ச்சி இல்லை"

எனப் பாரதி புகழ்ந்துள்ளார். இஃது ஈண்டு எண்ணி மகிழ்தற்பாலது. எனவே கதை கூற மட்டும் எழுந்ததன்று இக்காப்பியம். கதை கூற எழுந்ததாயின் காப்பியம் மதுரைக் காண்டத்தோடு முடிவுற்றிருக்கும். ஆனால் இக்காப்பியம் தமிழகப் பெருமை பேச எழுந்தமையின் வஞ்சி பற்றிய விரிவும் வேண்டுவதாயிற்றென்க.

2. காப்பியத் தலைவி பூம்புகாரிலே பிறந்து, மதுரையிலே பரந்து, வஞ்சியிலே சிறந்தமை கண்கூடு. அம்முறையில் தமிழ்ச் செல்விக்கும் தமிழக வேந்தர் மூவர்க்கும் நெருங்கிய தொடர்புளது. எனவே ஆசிரியருக்கு, அம் மூவேந்தரையும் போற்றிப் புனையும் பொறுப்புளதாயிற்று. புகார், மதுரைக் காண்டங்களால் முறையே சோழனையும் பாண்டியனையும் ஏற்றிப் போற்றியமை போன்றே சேர மன்னன் சீரையும் சிறப்பையும் புகழ்தல்வேண்டுமன்றே? எனவே தான் சேரனையும் சேர நாட்டையும் ஒப்பப் புகழ்வான்வேண்டி வஞ்சிக் காண்டத்தை அமைத்தாரென்க. இதனைப் பதிகம் குறிப்பாக

"முடிகெழு வேந்தர் மூவர்க்கும் உரியது
அடிகள் நீரே அருள்க" எனச் சாத்தனார்

நடுநிலைமைச் சுட்டிச் சென்றதாக உணர்த்துகின்றது.

3. ஏனை இரண்டு உண்மைகளோடு 'உரைசால் பத்தினியை உயர்ந்தோர் ஏத்துவர்' என்ற உண்மையை உணர்த்துவதன்றே சிலப்பதிகாரம். இதனையே 'பத்தினியை ஏத்துதல் உட்கோளாகலான்' என அடியார்க்கு நல்லாரும் குறிப்பிடுவது காண்க. இந்நோக்கம் நிறைவேறுவது வஞ்சிக் காண்டத்திலேதான். எனவே இளங்கோவடிகள்தான் இக்காண்டத்தை எழுதியிருத்தல்வேண்டும் என்பதில் எட்டுணையும் ஐயமில்லை எனலாம்.

4. தமிழ் உள்ளம் என்றுமே இன்பியலை நாடும் தன்மைத்து. அதிலும் முற்றும் துறந்த அடிகளின் துறவுள்ளம் அனைத்தும் இனிய நெறியில் இயங்கவிழைவது. அம்முறையிலே காப்பியத்தை மங்கல வாழ்த்தோடு - திருமணத்தில் துவக்கிய துறவி, காப்பியத்தை முடிக்

கும்போதும் இன்பியல் முடிவைத்தானே நாடியிருப்பார்? கோவலன் கொலையுற, கண்ணகியைத் திக்கற்றவளாக விட்டுவிட எவருள்ளம் தான் விழையும், படிப்பவர் உள்ளமும் அல்லலுற்று ஆற்ருது ஏங்குமன்ருே? எனவே தமது சிறந்த படைப்பு (Ideal character) பாதுகாப்புடன் அமைய, படிப்போர் மனமும் அமைதியடைய காப்பியத்தை இன்ப முடிவோடு முடிக்க விழைந்தார் இளங்கோவடிகள். இதற்குத் திக்கற்ற - துணையிழந்த கண்ணகிக்குச் செங்குட்டுவன் கல் சமைத்து நிலைபெறச் செய்தமை கூறவேண்டுவதாயிற்று. ஆகையால் துன்ப முடிபோடு விட்டுச் செல்லாது இன்பியல் முடிபோடு முடித்துச்சென்ற அடிகளின் துறவுள்ளம் படைத்த படைப்பே வஞ்சிக்காண்டம் என உறுதிப்படுவது காண்க.

5. பெருங்காப்பிய நிலை பேசுங்கால் 'நெருங்கிய சுவையும்' வேண்டற்பாலதெனத் தண்டியலங்காரம் கூறும். ஒன்பான் சுவையுள் தலையாயன மூன்று: அவை இன்பச் சுவை, அவலச் சுவை, வீரச்சுவை, என்பன. ஏனைய ஆறும் இம்மூன்றனுக்கும் அணியும் அழகும் செய்யும் திறத்தன. பெருங் காப்பியத்திற்குச் சுவையும் இன்றியமையாததாகும். இன்றேல் காப்பியம் கனிவுடையதாக அமையாது. இதனையறிந்தே இளங்கோவும் கவிதைச் சுவை நனி சொட்டச் சொட்ட, தமது காப்பியத்தை யாத்துள்ளார். புகார்க் காண்டத்தில் பெரும்பான்மை இன்பச் சுவையும், மதுரைக் காண்டத்தில் அனைத்தும் அவலச்சுவையும், வஞ்சிக் காண்டத்தில் வீரச்சுவையும் விளங்கச்செய்துள்ளார். இந்நிலையில் வஞ்சிக் காண்டம் வீரச்சுவை பேசும் வீறுடைக் காப்பியத்தின் முக்கிய அங்கமாக அமைய அதனை அடிகள் இயற்றவில்லை எனப் பேசவும் ஒல்லுங்கொல்!

6. இளங்கோவின் ஏக்கம், எல்லா வகையிலும் ஏற்றம் பெற்றுத் திகழும் தமிழகம் ஒற்றுமை ஒன்றில்மட்டும் குறைபட்டுள்ளதே என்பதாகும். சங்க காலத்தும் அவ்வையார், காரிக்கண்ணனுர், கோவூர் கிழார் போன்ருரும் ஒற்றுமையின்மை கண்டு உளம் வெதும்பியமையைப் புறப்பாட்டுக்கள் உணர்த்தா நிற்கும். ஏன்? இருபதாம் நூற்ருண்டின் இணையற்ற கவிஞராம் பாரதியும் 'ஒன்றுபட்டால் உண்டு வாழ்வே! ஒற்றுமை நீங்கில் அனைவர்க்கும் தாழ்வே' என ஓதிச் சென்றமையும் நம்மிடையே ஒற்றுமையின்மையைத்தானே உணர்த்துகின்றது. அந்த முறையில்தான் அடிகள் உள்ளமும் ஒரு குடைக்கீழ் உலகாளும் பெற்றியுடைத் தமிழரிடையே ஒருமை காணும் உள்ளமில்லையே என எண்ணி ஏங்குவதாயிற்று. கவியின் எண்ணம் நனவில் ஈடேருவிடினும் கற்பனையிலேனும் நிறைவேற விழைவதாயிற்று. எனவேதான் சேர சோழ பாண்டிய நாட்டை மும்மைத் தமிழகமாக முத்தமிழ்க் காப்பியத்தில் முகிழ்க்கச்செய்தார். முறையே மூன்று காண்டங்களிலும் மூவேந்தரையும் தனித்தனியே புகழ்ந்த அடிகள் மூவரையுமே வஞ்சிக் காண்டத்தில் ஒருங்குவைத்து 'அம்மானைவரி' 'கந்துகவரி' 'ஊசல் வரி'யிலும், கடைசியாக 'வள்ளைப் பாட்டாலும்' பாடிப்பரவி மனம்

மகிழ்கின்றார். எனவே இளங்கோவடிகளின் எண்ணமும் ஏக்கமும் இனிது நிறைவேறுமிடம் வஞ்சிக் காண்டம். அத்தகைய வஞ்சிக் காண்டத்தை அடிகள்தான் இயற்றியிருத்தல் வேண்டுமென்றால் அஃது எத்துணையும் மிகையாகாது.

7. புகார் மதுரைக் காண்டங்களோடு சிலம்பின் காப்பியம் நின்றுவிடுமாயின் நாமறிந்தது அரைகுறையாகவே அமையும் எனலாம். முன் இரண்டு காண்டங்களிலும் சொல்லப்படாத பல செய்திகளை வஞ்சிக் காண்டத்தில்தான் அறிகின்றோம். கண்ணகி விண்ணிடை சென்றமை, வெற்றிவேற் செழியன் ஆயிரம் பொற் கொல்லரைப் பலியிட்டமை, மணிமேகலை துறவு, தேவந்தியின் முற்பிறப்புண்மை, இளங்கோவடிகள் 'அந்தமில் இன்பத்து அரசாள் வேந்தன்' என்பன போன்ற அரிய செய்திகள் வஞ்சிக்காண்டமின்றேல் அறியப்படாது போயிருக்கும். இதனை நோக்க வஞ்சிக்காண்டம் இன்றியமையாதது, அதனால் அடிகளும் அதனை எழுதியிருத்தல் வேண்டுமென்றும் உணர்கின்றோம்.

8. முதன்முதலில் மங்கலவாழ்த்துப் பாடலில் 'மாதரார் தொழுதேத்த வயங்கிய பெருங்குணத்துக் காதலாள்' எனக் கண்ணகியைக் குறிப்பிடுகின்றார் ஆசிரியர். பெண் இன்னொரு பெண்ணைப் போற்றுதல் அருமையிலும் அருமை. அங்ஙனமிருக்க ஆசிரியர் கண்ணகியை மங்கையர் பலரேத்தும் நங்கை எனக் குறிப்பிடுகின்றார். இவண் குறிப்பிடுவதை வஞ்சிக்காண்டத்தில்தான் விளக்குகின்றார். அவண் காவற்பெண்டு, அடித்தோழி, தேவந்தி, வஞ்சிமகளிர், ஆயத்தார் ஆகிய பெண்பாலர் கண்ணகியை உளமார ஏத்துகின்றனர். இங்ஙனம் கண்ணகியை முதற்கண் குறிப்பிட்டமை உண்மையாமிடம் வஞ்சிக்காண்டமாகின்றது. எனவே அடிகளல்லாது வேறு யாரோ வஞ்சிக்காண்டத்தை இயற்றியிருத்தல் வேண்டுமென்றோ, அன்றி அப்படி இயற்றியிருந்தாலும் தன் குலச் சிறப்பினைப் பேசவே எழுதியிருத்தல் வேண்டுமென்றோ கூறுவது அத்துணை நலம் பயப்பதாமோ?

9. நாடகத்திலும் சரி, காப்பியத்திலும் சரி, ஆசிரியர் தாம் படைத்த பாத்திரங்களைப் பற்றிய முழு விவரமும் தருதல் வேண்டும். இன்றேல் குறையுடையதாகவே அமையும். வஞ்சிக்காண்டமின்றேல் கவுந்தியடிகள் உண்ணா நோன்பிருந்து உயிர்துறந்தமை; இடைக்குல மூதாட்டியாம் மாதரி இடையிருள் யாமத்து எரியகம் புக்கது; கற்பின் செல்வி கண்ணகி விண்ணகம் சென்றமை; கோவலன் அன்னையும் கண்ணகி தாயும் உயிர்துறந்தமை; மாசாத்துவான், மாநாய்கன் துறவுபூண்டமை போன்ற பாத்திரங்களின் பிற்றைநிலையினையும் அறிய இயலாதுபோம். பாத்திரங்களைப் பற்றிய முழு விவரமும் - பிற்றை நிலையும் அறியாத வகையில் அமையுமேல் பின், அடிகள் தந்த அழகுதமிழ்க் காப்பியம் அரைகுறைக் காப்பியமாகவே அமைந்துவிடும், எனவே பாத்திரப் பகுப்பு இனிது அமைய வஞ்சிக்

காண்டத்தை இளங்கோவே எழுதியிருக்கவேண்டும் என எண்ண இடமுண்டாகின்றது.

10 காப்பியத்தை யாத்துச் செல்லும் வகையிலே சேரநாடு தந்த செந்தமிழ்ச் செல்வர்க்கு ஏற்பட்ட இடையூறுகள் பல: புகார்க் காண்டத்தில் பெரும்பங்கு கொள்வோர்: கோவலன், கண்ணகி, மாதவி ஆகிய மூவராவர். கதை நிகழ இம்மூவரில் எவரிடையேனும் குறை அமைய வேண்டுவதாயிற்று. கண்ணகியோ காப்பியத்தலைவி; உரைசால் பத்தினியை உயர்ந்தோரேத்துவர் என்ற உண்மையை உலகிற்குணர்த்த வந்த ஒரு மாமணி; மாதவியோ கண்ணகியின் நலமுணர்த்தவந்த நந்தா விளக்கு (foil). எனவே இவ்விரு மாமணிகளின்மேல் குறை கற்பிக்க இயலாது கோவலனையே குறையுடையனாகக் காட்டவேண்டுவதாயிற்று.

ஆனால் மதுரைக் காண்டத்தில் இக் கோவலன் கொலையுறுகின்றான். கொலையுறப்போகும் கோவலன் புகார்க் காண்டத்தில் காணப்பட்ட கோவலனாகவே காட்சியளிப்பின் அவன் 'தன்னிகரில்லாத் தலைவனும்' ஆகான், அவன்பால் எவ்வித இரக்கமோ ஏக்கமோ (Pity and terror) படிப்போர் மனத்தில் ஏற்படாது. எனவே கோவலனை மதுரைக் காண்டத்தில் பாத்தரும் பண்பினனாகவும்; கடக்களிறடக்கிய கருணைமறவனாகவும்; நல்வழிப்படுத்திய செல்லாச் செல்வனாகவும்; பல்லாண்டு புரந்த இல்லோர் செம்மலாகவும், காட்டுகின்றார். இங்ஙனமாக, புகார்க் காண்டத்தில் கோவலனுக்கேற்பட்ட குறையை மதுரைக்காண்டம் கொண்டு நீக்கினார் ஆசிரியர்.

மதுரைக் காண்டத்தில் சிறப்பிடம் பெறுவோர் கோவலன், கண்ணகி, பாண்டிய மன்னன் மூவருமே. இங்கே கோவலனைக் குறையுடையனாகக் காட்ட இடமில்லை, ஏனெனில் கொலையுறப் போகின்றான் அன்றியும் புகார்க் காண்டத்தில் எளியனாகக் காட்சியளித்த சாதாரணத் தலைவனை மதுரைக் காண்டம் கொண்டு தன்னிகரிலாத் தலைவனாக - ஏற்றமுடையவனாகத் தீட்டியுள்ளார் காப்பிய ஆசிரியர். கண்ணகியையும் குறையுடையளாகக் காட்டவியலாது. காரணம் - கணவனை இழக்க இருப்பவள், காப்பியத் தலைவியும்கூட. பாண்டிய மன்னனையன்றி வேறொருவரையும் வழுவியோராகக் காட்ட இயலாத நிலையில் இளங்கோவடிகள், பாண்டி மன்னன் பொற்கொல்லன் சொற்கேட்டு பாத்தரும் பண்பினனைப் படுகொலை செய்வதாகக் காட்டுகின்றார். இங்கே மதுரைக் காண்டத்தோடு சிலப்பதிகாரம் நின்றுவிடுமேல் என்றும் நம் மனதில் பாண்டிய மன்னன் பழியுடையனாகவே காட்சியளிப்பான். அங்ஙனம் அமைய அடிகள் உள்ளம் விழையுங்கொல்!

எனவேதான் **புகார்க் காண்டத்தில்** சாதாரணமான, குறையுடையனாகக் காணப்பட்ட கோவலனை, நிறையுடையனாக - தன்னிகரில்லாத் தலைவனாக **மதுரைக் காண்டம்** கொண்டு விளக்கியமை போன்றே மதுரைக் காண்டத்தில் குறையுடையனாகவே

அனைவர் மனத்திலும் அமைந்த பாண்டிய மன்னனைத் தீதிலாத் தென்னவனாகத் தீட்டவேண்டிய அவசியமும் அடிகட்கு ஏற்பட்டது. பழியுடைப் பாண்டியனாக நாம் கருதும் பாண்டியனைப் பழியுடையனல்லன் என்பதை வஞ்சிக் காண்டம் கொண்டு - செங்குட்டுவன் வாயிலாகவும், கண்ணகிவாயிலாகவும் தெள்ளத் தெளியத் தீட்டுகின்றார் ஆசிரியர்.

இதுகாறும் கூறியவற்றால் மதுரைக் காண்டத்தில் பழியுடையனாகக் காணப்பட்ட பாண்டிய மன்னனைப் பழியிலாப் பாண்டியனாக வஞ்சிக் காண்டம் கொண்டு விளக்கியுள்ளார் ஆசிரியர் என்றும், அதனால் ஆசிரியரே காப்பியத்தைச் சீர்மையுடன் நடத்திச்செல்வான் வேண்டி, வஞ்சிக் காண்டத்தை யாத்துள்ளார் என்பதும் இனிது போதரும்.

11. அடுத்து, அறக் கற்பினளாகிய கண்ணகி மறக் கற்பினளாக மதுரைக் காண்டத்தில் காட்சியளிக்கின்றாள்; ஆணவமும், தன்முனைப்பும், செருக்கும் மிக்கவளாகவே காணப்படுகின்றாள். மதுரைக் காண்டத்தோடு காப்பியம் முடிவடையுமேல், கண்ணகி நம்மனத்தில் கற்பின் செல்வியாகவோ, பாரோர் ஏத்தும் பத்தினியாகவோ, இடம்பெறமாட்டாள்; மாறாகக் கொடுங் காளியாகவே காட்சியளிப்பாள். பின் உரைசால் பத்தினியின் உயர்வை எங்ஙனம் உலகம் உணரும்? இத்தகைய எண்ணம் எள்ளளவும் நம்மனத்தில் எழாவண்ணம் வஞ்சிக்காண்டம் கொண்டு செருக்கு நீக்கிய செந்தமிழ்ச் செல்வியாக, தூயளாக, அமைதியின் சின்னமாகச் சித்தரிக்கின்றார் சிலம்பாசிரியர். கண்ணகியைக் கடவுள் நிலையடைந்த காப்பியத் தலைவியாகக் காட்டும் முறையிலும் வஞ்சிக் காண்டம் வேண்டுவதாயிற்று.

12. மதுரைக் காண்டத்தில் 'வேட்டுவவரி'யில், கண்ணகி

> ' இவளோ, கொங்கச் செல்வி, குடமலை யாட்டி
> தென்றமிழ்ப் பாவை, செய்தவக் கொழுந்து
> ஒருமா மணியாய் உலகிற் கோங்கிய
> திருமா மணி "

எனப் புகழப்படுகின்றாள்.

இதற்கு உரை வகுத்த அரும்பத வுரையாசிரியரும், "மேற்பட்டு இவளைத் தெய்வமாகக் கொண்டாடுமிடம் கூறியபடியாலே" எனவும் குறிப்பிடுகின்றார். இப்பாராட்டனைத்தும் உண்மையென உறுதிப்படுமிடம் வஞ்சிக்காண்டத்தில்தான். வஞ்சிக்காண்டத்திலன்றோ கண்ணகி, கொங்கச் செல்வியாகவும், குடமலையாட்டியாகவும் காட்சியளிக்கின்றாள். அன்றியும் அங்கன்றோ கற்புக் கடம்பூண்ட பொற்புடைத் தெய்வத்தை உலகிற் கோங்கிய ஒருமாமணியாய் உளமாற உணர்கின்றோம்—உணர்ச்சியோடு பரவுகின்றோம்—பின்னர் நிகழவிருப்பதை முன்கூட்டிக் குறிப்பிடும் நயமும் காண்கிறோம். வஞ்சிக்காண்டமின்றேல் இப்பகுதி விளக்கமில் பகுதியாக அமைந்துவிடும். பின்னர் பிரௌனிங் (Browning) என்ற ஆங்கிலக்

கவியைப் பற்றிக் கூறுமாப் போன்றே சிலம்பிலும் விளங்காப் பகுதிகள் (Obscurity in Cilappathikaram) அமைந்துவிடும். எனவே இம்முறையிலும் இறுதிக்காண்டம் இன்றியமையாததாகின்றது.

13. வஞ்சிக் காண்டத்தில் வரும் வளமான பகுதி-அனைவருள்ளத்தையும் ஈர்க்கும் எழிலுடைப் பகுதி ஒன்றுளது.

'மாதவி மடந்தை
கானற் பாணி கனக விசயர்தம்
முடித்தலை நெரித்தது' நீர்ப்படைக்காதை: 49—51)

இப்பகுதி சிலம்பின் கதையை-செந்தமிழ்க் காப்பியத்தையே-சுருக்கி இரண்டடியில் தரும் கருவாக (Touch stone of the Epic of the Anklet) அமைகின்றது. மாதவி கடற்கரையிலே ஏழிசைவல்ல யாழிசையோடு பாடிய பாட்டிற்கும், செங்குட்டுவன் வடவரை வணக்கியமைக்கும் என்ன தொடர்பு? தென்னகக்கலைமாதின் கானற்பாணி வடவரின் தலையை நெரிப்பானேன்? விளக்கம் மூன்று காண்டங்களிலும் பரவிக்கிடப்பதை கற்றோர் அறிவர். புகார்க் காண்டத்திற்கும் வஞ்சிக் காண்டத்திற்கும் முடிபோடும் இப்பகுதி வஞ்சிக்காண்டத்தில் அமைந்து அனைவருள்ளத்தையும் ஈர்க்கும்போது வஞ்சிக் காண்டம்வேண்டுமென்றே விழைகின்றோம். இல்லையா?

14. காப்பிய வாயிலாக நாம் பெறும் அறிவுரைகளும் வஞ்சிக் காண்டத்திலன்றோ அமைந்துளது.? காப்பியத்தின் கருத்து இன்பத்தை ஊட்டுவதோடு படிப்போர்க்குப் பயனுடையன பகருவதுமாகும். இலக்கியத்தில் இன்பம் மட்டுமிருந்தென்னபயன்? நீதியும் இன்றியமையாததன்றோ? அம்முறையில்தான் அடிகளும் காப்பியத்தைப் படித்து முடிக்கும் தறுவாயில், 'தெளிவுறக் கேட்ட திருத்தகு நல்லீர்' என விளித்து,

பரிவு மிடுக்கணும் பாங்குற நீங்குமின்!
தெய்வந் தெளிமின்! தெளிந்தோர்ப் பேணுமின்!
... ... ... ... ... ... ...
... ... ... ... ... ... ...
செல்லுந் தேஎத்துக் குறுதுணை தேடுமின்!
(வரந்தருகாதை 185—201)

என அறிவுரை கூறுகின்றார். இங்ஙனம் அறிவுரை பகரும் அடிகள் வஞ்சிக் காண்டத்தை எழுதாதிருந்திருப்பாரா?

15. கற்பின் செல்வியாம் கண்ணகியை ஏத்திப் போற்றியோர் பலர். அவரவர் நிலைக்கேற்ப அவரவர்கள் பூம்புகார்ப் பாவையைப் போற்றிப் பரவினர். எளியோர் இன்சொல் கொண்டு ஏத்தினர். பாவலராம் இளங்கோவும் பைந்தமிழில் பெருங்காப்பியம் செய்து—நூற்கோயில் சமைத்துச்-சிறப்புச்செய்தார். காவலராம் குட்டுவனும்

வடபேரிமையத்து வான் தரு சிறப்பின் கடவுட் பத்தினிக்குக் கற்கால் கொண்டு, கங்கைக் கரையகம் புகுந்து நீர்ப்படை செய்து கனக விசயர்தம் கதிர்முடித்தலை மீது கல்லையேற்றிக் கொணர்ந்து கற் கோயில் கட்டினன். பிறந்த நாடும் செல்லாது, கணவனைப் பிரித்த பாண்டிய நாட்டிலும் தரியாது, தன்னுடு போந்த அறத்தெய்வத்திற்கு நிலைபேறு செய்யுமாற்றன் அழகுக் கோயில் கட்டிய காவலனைப்பற்றி ஏதும் கூருது மதுரைக் காண்டத்தோடு காப்பியம் முடிந்திருக்குமேல் காப்பியம் காப்பியமாமோ? எனவே வஞ்சிக் காண்டம் வீரமாபத்தினிக்குக்—காப்பியத்திற்கு—இன்றியமையாததாகின்றது எனலாம்.

16. அன்றியும், கண்ணகி கதையும் காப்பியமும் ஒன்றி இணையும் இடமும் வஞ்சிக்காண்டமே! கதையைக்கொண்டு காப்பியம் யாத்த இளங்கோ இரண்டினையும் முடிபோடுமிடம் சிக்கலுக்குரிய இக்காண்டமே!

" அருந்திற லரசர் முறைசெயி னல்லது
பெரும்பெயர்ப் பெண்டிர்க்குக் கற்புச் சிறவாதெனப்
பண்டையோ ருரைத்த தண்டமிழ் நல்லுரை
பார்தொழு தேத்தும் பத்தினி யாதலின்
ஆர்புனை சென்னி யரசற் களித்துச்,
செங்கோல் வளைய வுயிர்வா ழாமை
தென்புலங் காவன் மன்னவற் களித்து,
வஞ்சினம் வாய்த்தபி னல்லதை யாவதும்
வெஞ்சினம் விளியார் வேந்த ரென்பதை
வடதிசை மருங்கின் மன்னவ ரறியக்
குடதிசை வாழுங் கொற்றவற் களித்து.

நடுகற்காதை (207—217)

இங்ஙனம் கண்ணகிக் கதைக்கும், காப்பியப் போக்கிற்கும் உள்ள உட்பிணைப்பை கண்ணகி மூவேந்தர்க்கும்- முக்காண்டத்தாலும் உணர்த்தும் ஒளிநெறியினையும் வஞ்சிக்காண்டத்தில் வரும் இப்பகுதியாலன்றோ அறிகின்றோம்! இங்ஙனம் கதையும் காப்பியமும் ஒன்றிடும் பகுதியுடைய காண்டத்தை இளங்கோவடிகளன்றி வேறு யார் எழுதியிருக்கக்கூடும்.

17. புகார், மதுரைக் காண்டங்களின் நடைவளமும் சொற்போக்கும் போன்றே வஞ்சிக் காண்டத்தின் சாயலும் அமைந்துளது. புகார், மதுரைக் காண்டங்களை ஒருவரும், வஞ்சிக்காண்டத்தை இன்னெருவருமாக இருவேறு ஆசிரியர் இயற்றியிருப்பாராயின் இரண்டனுக்கும் உள்ள நடையும் போக்கும் வேறுபடுதல் வெள்ளிடைமலை. ஆனல் அங்ஙனமின்றி வஞ்சிக்காண்டமும் முன் காண்டங்களைப் போன்றே முழுதும் அதே நடையும் போக்கும் சாயலும் அமையப் பெற்றமையால் வஞ்சிக்காண்டத்தை புகார், மதுரைக் காண்டங்களை இயற்றிய இளங்கோவே யாத்திருக்கவேண்டும் எனத் துணியலாம்.

18. முன்னிரு காண்டங்களில் உவகையில் மிதந்தும், துன்பத்தில் மூழ்கியும், புயலிடைச் சிக்கியும் தவித்த நாம், தென்றலின்பம் தவழ, அமைதி நிலவ, மனநிறைவும் மாண்பும் பெறுமிடம் வஞ்சிக்காண்டமே! அத்தகைய நிறையின்பம் நல்கும் வஞ்சிக் காண்டத்தைக்—காப்பியத்தின் இறுதிநிலையை—இளங்கோ இயற்றியிரார் என்னும்போது ‘நெஞ்சிதான் பொறுக்குதில்லையே’!

19. இறுதியாக: பெருங்காப்பிய இலக்கணம் கூறிய தண்டியாசிரியர் ‘நாற்பொருள் பயக்கும் நடைநெறித்தாகி’ எனக் கூறுகின்றார். அறம், பொருள், இன்பம், வீடு ஆகிய நான்கினையும் கூறுவதே பெருங்காப்பியமென்பர். அங்ஙனம் காண்போமாயின் அறம், பொருள், இன்பம் மூன்றனையும் முதலிரு காண்டங்களிலும் கண்ட நாம், வீடுபேற்றையும் வீடுபெறு வழியையும் வஞ்சிக்காண்டத்தில் தான் உணருகின்றோம். வள்ளுவர் போன்றே சிலம்பாசிரியரும் அறம் பொருளின்பம் மூன்றையும் கூறி வீடு பேற்றைச் சொல்லாமற் சொல்லி உய்த்துணருமாறு உணர்த்திச் சென்றுளார். வஞ்சிக் காண்டமின்றேல் வீடுபேறில்லை; வீடு பேறின்றேல் பைந்தமிழ்க் காப்பியமும் ஒரு பெருங்காப்பியம் ஆமாறில்லை. ஆகையால் இவ்வகையிலும் இக்காண்டம் இன்றியமையாததாகின்றது.

20. இதுகாறும் கூறியவற்றால், சிலப்பதிகாரம் கதை கூறமட்டும் எழுந்ததன்று, மும்மைத் தமிழகத்தை—மூவேந்தர் சீர்மையைத் துலக்க எழுந்ததென்றும்; பத்தினியை உயர்ந்தோரேத்துதல் உண்மையாதல் இவ்வஞ்சிக்காண்டத்தில்தான் என்றும்; காப்பியம் இன்பியல் முடிபாதலும், வீரச்சுவை விளங்குதலும் இங்கேதான் என்றும்; மூவேந்தர் ஒன்றுபடும் காட்சியும், சொல்லப்படாத செய்திகளும், கண்ணகி மாதரால் தொழுதேத்தப்படுதலும், பாத்திரப் பகுப்பு நிறைவு பெறுதலும் இக்காண்டத்தால்தான் என்றும்; தென்னவனைத் தீதிலனாகக் காட்டவும், கண்ணகியைத் தூயளாகவும், குடமலையாட்டியாகவும், கொங்கச்செல்வியாகவும், ஒருமாமணியாய் உலகிற்கோங்கிய திருமாமணியாயும் நிறுவுமிடம் இறுதிக்காண்டமே என்றும்; கானற்பாணிக்கும் கனகவிசயர்க்கும் தொடர்புபடுத்தும் நிலையும், கதையும் காப்பியமும் இணைக்கப்படுமிடமும் இங்கேதான் என்றும்; கண்ணகியைக் கற்கோயில் கொண்டு நிலைபெறச் செய்தமையும், அனைவரும் அமைதியும் தென்றலின்பமும் தழுவுமிடமும், நடையும் சாயலும் முன்னிரு காண்டங்களைப் போன்றமைந்த வஞ்சிக் காண்டமே என்றும்; கண்டோம்.

கண்டு தெளிந்த நாம், இனியும் வஞ்சிக்காண்டம் இளங்கோவடிகளால் இயற்றப்படவில்லை என்றோ, அப்படி இயற்றப்பட்டிருந்தாலும் அது செங்குட்டுவன் சிறப்பும், சேரர் பெருமையும் பேச மட்டுமேயாகும் என்றோ கூறவும் கூடுங்கொல்!

---

# சாதியும் தமிழரும்.

(பதிப்புரிமை ஆசிரியர்க்கே)

சாமி. சிதம்பரனர்.

## சாதி என்னும் சொல்.

சாதி என்பது தமிழ்ச் சொல் அன்று; ஜாதி என்ற வடமொழிச் சொல்லே சாதி என்று தமிழில் வழங்குகின்றது. இந்தச் சாதி என்ற சொல்லும் மக்களைக் குறிக்கும் சொல்லாகப் பண்டைக்காலத்தில் வழங்கவில்லை.

தொல்காப்பியத்தில் சாதி என்ற சொல் வழங்குகின்றது. ஆனல் அது மக்களைச் சுட்டவில்லை.

"நீர் வாழ் சாதியுள் அறுபிறப்பு உரிய"
"நீர் வாழ் சாதியுள் நந்தும் ஒன்றும்"

என்பன தொல்காப்பியம் மரபியல் சூத்திரங்கள். இச்சூத்திரங்களில் சாதி என்னும் சொல் தண்ணீரில் வாழும் உயிர்களையே குறித்தன.

இச்சொல் பிற்காலத்தில் மக்களைக் குறித்து வழங்கிற்று. சாதி என்னும் சொல் தமிழில் இல்லை என்பது ஒரு உண்மையை உணர்த்துகின்றது. மக்களுக்குள் பிறப்பினுல் வேற்றுமையில்லை என்பதுதான் அவ்வுண்மை.

பழய நூல்களிலே நால்வகைச் சாதிகள் காணப்படுகின்றன. இப்பிரிவுகள் தமிழ் நாட்டிலும் உண்டு; தமிழ் நூல்களிலும் இப்பிரிவுகள் காணப்படுகின்றன. இப்பிரிவு—இந் நால்வகைப் பிரிவு—எப்படித் தோன்றின என்பதைப்பற்றிப் பலவகையான கருத்துக்கள் உண்டு.

ஒரு சாரார், நால்வகைச் சாதிப் பிரிவு தமிழர்களிடம் இருந்ததில்லை; அது ஆரியர்களால் தமிழரிடம் புகுத்தப்பட்டது; என்று சொல்லுகின்றனர். இது உண்மைதானு? தமிழரிடமே தான் நால்வகைப் பிரிவு தோன்றியதா? என்பதை நாம் காண வேண்டும்.

நான்குவகைச் சாதிகள், நாலாயிரம் சாதிகளாக ஆகிவிட்டன; இந்தக் கணக்குகூடச் சரி அன்று; எத்தனையோ சாதிகள்! சாதிப்பிரிவினுல் உண்டான தீமைகள் பல; உண்டாகும் தீமைகள் பல. ஒரு காலத்தில் சாதி வேற்றுமை புனிதமாக—இன்றியமையாததாக—எண்ணப்பட்டது. ஆனல் ஆயிரக்கணக்கான ஆண்டுகளுக்கு முன்பே, சாதி வேற்றுமை தீமையானது என்ற முடிவுக்கு வந்து விட்டனர். இதைப் போக்குவதற்குத் தமிழ்ச் சான்றோர்கள் பலவகையில் முயன்றும் இருக்கின்றனர். ஆனல் இன்றளவும் சாதி வேற்றுமை ஒழிந்தபாடில்லை.

சாதிப் பிரிவு, ஆரம்பத்தில் பிறப்பில் வேற்றுமையுண்டு என்ற கருத்தில் தோன்றவில்லை. தொழில் காரணமாக வகுப்புக்களாக மக்கள் பிரிந்தனர். ஒவ்வொரு தொழிலைச் செய்யும் மக்கள் ஒவ்வொரு பிரிவினராயினர். இத்தகைய பிரிவு பழந் தமிழ் நாட்டில் இருந்தது.

மக்கள் ஒரே கூட்டமாக, நாகரிகம் இல்லாமல் வாழ்ந்த காலத்தில் அவர்களிடம் பிரிவு தோன்றியிருக்கமுடியாது. அவர்களிடம் நாகரிகம் வளர்ந்த காலத்தில்தான் பிரிவுகள் தோன்றியிருக்க முடியும்.

சிறப்பாக நாகரிகம் பிறந்த இடம் மருத நிலம் என்று கருதப் படுகின்றது. எங்கே உழவுத் தொழில் வளர்ச்சியடைகின்றதோ அந்த இடத்தில்தான் பலவகையான தொழில்கள் பிறக்க—வளர—இடம் உண்டு. இவற்றின்மூலம் மக்களிடையே பிரிவினை ஏற்படவும் இடம் உண்டு.

ஆரியர்கள் பாரத நாட்டுக்கு வருவதற்கு முன்பே இந் நாட்டில் உழவுத் தொழில் வளர்ச்சி பெற்றிருந்தது. குறிப்பாகத் தமிழ் மக்கள் சிறந்த உழவர்களாக இருந்தனர். இவர்கள் சிந்து, கங்கை ஆற்று நிலப்பகுதிகளில் எல்லாம் பரவியிருந்தனர். இவ் வுண்மையை வரலாற்று ஆசிரியர்கள் ஒப்புக்கொள்ளுகின்றனர்.

### சாதி பிறந்த இடம்.

உழவுத் தொழில் வளர்ந்திருக்கும் இடத்தில்தான் உழவர்கள் இருப்பார்கள். பயிர்களை விலங்குகள் அழிக்காமல் காக்கக் கூடிய வீரர்கள் இருப்பார்கள். விளைந்த பண்டத்தை வேறிடங்களில் கொண்டு சேர்த்து, அங்குள்ள பண்டங்களை வாங்கிவரும் வணிகர்கள் இருப்பார்கள். உழவர்களுக்கும், வணிகர்களுக்கும், வீரர்களுக்கும் அறிவுரை கூறும் அறிஞர்கள் இருப்பார்கள். இன்னும் பல கருவிகளைச் செய்யும் தொழிலாளர்களும் தோன்றுவார்கள். இது இயற்கை உண்மை.

மருத நிலத்தின் தெய்வம் வேந்தன் என்று தொல்காப்பியம் கூறுகின்றது. இதனால் தமிழகத்தில் மருத நிலத்தில் அரசன் இருந்தான் என்று அறியலாம். பயிர்களைச் சேதமில்லாமல் காக்கத் தோன்றிய வீரர் பரம்பரையினரே பிற்காலத்தில் அரசர்களாயினர்; வேந்தர்களாயினர்.

பழமையான உழவுச் செல்வம் படைத்த தமிழ் மக்களிடையிலே தொழிலால் பல பிரிவுகள் பிறந்தன என்பதில் ஐயம் இல்லை. சிறப்பாக, முதல் முதலில் அந்தணர், அரசர், வணிகர், வேளாளர் என்ற பிரிவுகளே பிறந்திருக்கவேண்டும். இப்பிரிவுகளைப்பற்றித் தொல்காப்பியம் தெளிவாகக் கூறுகின்றது.

"அறுவகைப்பட்ட பார்ப்பனப் பக்கமும்
ஐவகை மரபின் அரசர் பக்கமும்
இருமூன்று மரபின் ஏனோர் பக்கமும்"

என்பது தொல்காப்பியம்—புறத்திணை இயல் சூத்திரம்.

"அறுவகையான தொழில்களையுடைய பார்ப்பனப்பகுதி; ஐந்து வகையான தொழில்களையுடைய அரசர் பகுதி; ஆறு வகைத் தொழில்களை உடைய வணிகர், வேளாளர் பகுதி" என்பது இச்சூத்திரத்தில் காணப்படுகின்றது.

ஓதல், ஓதுவித்தல், வேட்டல், வேட்பித்தல், ஈதல், ஏற்றல் என்பவை அந்தணர்க்குரிய அறுவகைத் தொழில்.

ஓதல், வேட்டல், ஈதல், காத்தல், தண்டம் என்பவை அரசர்க்குரிய ஐவகைத் தொழில்.

ஓதல், வேட்டல், ஈதல், உழுதல், நிரைகாத்தல், வணிகம் இவ்வாறும் வணிகர் தொழில்.

ஓதல், ஈதல், உழவு, நிரைகாத்தல், வாணிகம், ஏனையோர்க்கு உதவுதல் இவை வேளாளரின் ஆறு தொழில்.

(வேட்டல்—யாகம் செய்தல். நிரை—பசு மந்தை.)

இப்பிரிவு தமிழகத்தில் தோன்றியிருந்த நால்வகைப் பிரிவு. இதனை இன்னும் தெளிவாகத் தொல்காப்பிய மரபியலில் காணலாம்.

"படை, கொடி, குடை, முரசு, குதிரை, யானை, தேர், மாலை, முடி, பொருத்தமான இன்னும் பல அரசர்க்குரியன. (மரபு, சூ. 71) அந்தணர்க்கு உரியவைகளும் அரசர்களுக்கு உரியன. (ஷை 72)

"வாணிகம் செய்வது வைசியன் வாழ்க்கை (ஷை 77) எட்டு வகையான உணவுத் தானியங்களை உண்டாக்குவதும் வைசியன் தொழில் (ஷை 78) அவர்களுக்கு மலரும் மாலையும் உண்டு. (ஷை 79)

"வேளாளர்க்கு உழு தொழிலைத் தவிர வேறு தொழில் இல்லை (ஷை 80) வேந்தர்கள் விரும்பினால் அவர்கள் படைக் கலப் பயிற்சி பெற்றுப் போர் வீரர்களாவார்கள். மாலையும் அணிவார்கள். (ஷை 81)

"அந்தணர்க்கு முப்புரிநூல் கரகம் (தண்ணீர்ச் செம்பு) முக்கோல், ஆசனம், இவைகள் உரியவை (ஷை 70) அவர்கள் அரசு செய்வதற்கும் உரியவர்கள். (ஷை 82) இவைகளைக் கொண்டு, அந்தணர்கள், அரசுக்கு ஆலோசனை கூறுவோர்களாகவும் இருந்தனர் என்பதை அறியலாம்".

மேலே காட்டியவை தொல், பொருள், மரபியலில் உள்ளவை. இதனால் அந்தணர், அரசர், வணிகர், வேளாளர் என்னும் நால் வகைப் பிரிவினர் இருந்தனர் என்பதைத் தெளிவாகக் காணலாம். அவர்கள், தொழில் காரணமாகவே, இவ்வாறு பிரித்துக் கூறப் பட்டனர் என்பதில் ஐயம் இல்லை.

இந்நால்வகைப் பிரிவினருள் பிறப்பால் வேற்றுமையில்லை. இவர்களுக்குள் மணங்களும் நடைபெற்று வந்தன. சமயம் நேரும்போது, ஒருவர் தொழிலை மற்றவர் பார்த்து உதவியும் வந்தனர்.

இத்தகைய பிரிவு நாகரிகம் பெற்ற தமிழரிடந்தான் முதலில் தோன்றியிருக்க வேண்டும். தமிழர்கள் பழமையான நாகரிகம் படைத்தவர்கள் என்பதற்கு இப்பிரிவு ஒரு சான்றாகும்.

## சாதியும் ஆரியரும்.

ஆரியர்கள் இந்நாட்டுக்குள் குடிபுகும்போது தமிழரிடம், சிறந்த அரசியல் அமைப்பு இருந்தது. தமிழர்களிடம், அந்தணர், அரசர், வணிகர், வேளாளர் என்ற நான்குவகைப் பிரிவினர் இருந்தனர். இன்னும் பல தொழிலாளர்களும் இருந்தனர். அரசியலும், தொழில்களும், சமுதாய வாழ்வும் உயர்ந்த நிலையில் இருந்தன.

இந்நாட்டில் குடிபுகுந்த ஆரியர்களிடம் சாதிப்பிரிவு இருந் திருக்க முடியாது. வட ஐரோப்பாவிலும், மத்திய ஐரோப்பா விலும் தங்கியிருந்த மக்களே பல பிரிவினராக ஆரியர் என்ற பெயருடன் பல நாடுகளில் குடிபுகுந்தனர். அவர்களில் ஒரு பிரிவினர்தான் கைபர் கணவாய் வழியாக பாரதநாட்டுள்புகுந்தனர்.

ஓரே கும்பலாக ஆடு மாடுகளைச் செல்வமாகக்கொண்டு வாழ்ந்த மக்களிடம் வகுப்புப் பிரிவுகள்கூட இருந்திருக்க முடியாது. அவர்கள் குடிபுகுந்த மற்ற நாடுகளில் சாதிப்பிரிவு கள் இல்லை. அவர்கள் குடிபுகுந்த பாரதநாட்டில் மட்டுந்தான் சாதிப்பிரிவுகள் இருக்கின்றன. ஆதலால் இப்பிரிவுகளை அவர்கள் கொண்டுவந்தார்கள் என்று எப்படிக் கூறமுடியும்?

'ருக்' வேதத்தில் முதல் 8 மண்டிலங்களில் சாதிப்பிரிவைப் பற்றிக் கூறப்படவில்லை என்று வடமொழி வல்லார் கூறுகின்ற னர். பின் வரும் மண்டிலங்களில்தான் சாதிப்பிரிவு காணப்படுவ தாக உரைக்கின்றனர். ஆரியர்கள் பாரதநாட்டில் புகுந்தபோது, தமிழரிடம் அமைந்திருந்த நால்வகைப் பிரிவை அவர்களும் பின் பற்றினர்; அவைகளைப்பற்றி, அவர்கள் தமது நூல்களில் எழுதிக் கொண்டனர். தமிழரிடம் இருந்த நால்வகை வகுப்புப் பிரிவே நாளடைவில் நால்வகைச் சாதிப் பிரிவாக மாறிற்று. இதுவே, பல ஆராய்ச்சியாளர் கொள்கையாகும்.

ஆரம்பத்தில் மக்களிடையே உயர்வு தாழ்வுக்கு இடமில்லா மலிருந்த நால்வகைப் பிரிவுகள் நாளடைவில் உயர்வு தாழ்வு பாராட்டுவதற்கு இடமாகிவிட்டது. சாதியாகவும் மாறிவிட்டது. பிறப்பிலே வேற்றுமை உண்டு என்ற நிலையும் ஏற்பட்டுவிட்டது. இந்த உயர்வு தாழ்வின் காரணமாக மக்களுக்குள் ஒற்றுமை யின்மை பிறந்தது; ஒருவரை ஒருவர் வெறுக்கும் நிலை ஏற் பட்டது; ஒருவரை ஒருவர் ஏமாற்றும் நிலையும் பிறந்தது. இதன் பிறகுதான், அறிஞர்கள் சாதி பேதம் ஒழியவேண்டும் என்று கருதினர்.

**சாதி ஒழிப்புக்கு வழி.**

சாதி வேற்றுமை ஒழிவதற்கு வழி தேடிய அறிஞர்களிலே பலர் பலவிதமான வழிகளைக் கூறினர். கல்வி அறிவால் உயர்வு தாழ்வுகளைப் போக்கிவிடலாம் என்று நம்பினார்கள். ஆகையால் அவர்கள் எல்லோரும் கல்வி கற்கவேண்டும் என்று வலியுறுத்தி னார்கள். இந்த உண்மையைப் புறநானூற்றுப் பாடல் ஒன்றால் அறியலாம்.

"ஒருகுடிப் பிறந்த பல்லோர் உள்ளும்
மூத்தோன் வருக என்னாது, அவருள்
அறிவுடையோன் ஆறு அரசும் செல்லும்;
வேற்றுமை தெரிந்த நாற்பால் உள்ளும்
கீழ்ப்பால் ஒருவன் கற்பின்
மேற்பால் ஒருவனும் அவன்கண் படுமே."

"ஒரு குடும்பத்திலே பிறந்த பலருள்ளும், மூத்தவனை வரவேற்கா மல், அவருள் அறிவுடையவன், இளையவனாயிருந்தாலும், அவன் காட்டும் வழியில் அரசனும் நடப்பான். வேறுபட்ட நால்வகைச் சாதியிலே, கீழ்க்குலத்திலே பிறந்த ஒருவன் படித்திருந்தால், மேற்குலத்திலே பிறந்த ஒருவனும், அவனை வழிபடுவான்" (புறம் 183)

இப்பாடல் "தமிழகத்தில் நால்வகைச் சாதியிருந்தது. ஆனால் கற்றவன் உயர்ந்தவன். அவனுக்குச் சாதியில்லை. அவன் மேற்சாதியினரால் வணங்குவதற்குத் தகுதியுடையவன் ஆவான்" என்று கூறிற்று. 'கல்வி மக்களுடைய உயர்வு தாழ்வைப் போக்கும்' என்ற இக்கருத்தை இன்னும் பல புலவர்களும் வலியுறுத்திக் கூறியிருக்கின்றனர். பிற்காலத்து நூல்கள் பலவும் இக்கொள்கையை வலியுறுத்துகின்றன.

திருவள்ளுவர், எல்லோரும் நல்லொழுக்கம் உடையவர்க ளானால் மக்களிடையில் உள்ள வேற்றுமைகள் ஒழிந்துவிடும் என்று கூறுகின்றார். ஒழுக்கம் உடைய குடியே உயர்ந்த குடி; ஒழுக்கமற்ற குடி இழிந்த குடி; என்பது அவர் கருத்து. இதனை

"ஒழுக்கம் உடைமை குடிமை, இழுக்கம்
இழிந்த பிறப்பாய் விடும்"

என்ற குறளால் காணலாம்.

சாதி வேற்றுமை ஒழிவதற்குக் கல்வியையும் கருவியாகக் காட்டுகின்றார் வள்ளுவர். இதனை

"யாதானும் நாடாமால், ஊர்ஆமால் என்ஒருவன்
சாந்துணையும் கல்லாத ஆறு"

என்ற குறளால் அறியலாம்.

சமணர், பவுத்தர் முதலிய மதத்தினரும் ஒழுக்கத்தை வலியுறுத்தினர். ஒழுக்கத்தினால் மக்களிடம் உள்ள உயர்வு தாழ்வுகளைப் போக்க முயன்றனர்.

சைவ, வைணவ மதத் தலைவர்கள் மதத்தின் மூலம்—அன்பு நெறியின் மூலம்—மக்களிடம் உள்ள சாதி வேற்றுமையைப் போக்க முயன்றனர். பலதிறப்பட்ட சாதிகளிலே பிறந்த சைவ வைணவ அடியார்கள், அச்சமயத்தினரால் உயர்வாக—வேற்றுமை பாராட்டாமல்—வணங்கப்படுவதைக் காண்கின்றோம்.

"ஆ உரித்துத் தின்று உழலும் புலையரேனும்,
கங்கைவார் சடைக் கரந்தார்க்கு அன்பர் ஆகில்
அவர் கண்டீர் யாம் வணங்கும் கடவுளாரே"

என்பது நாவுக்கரசர் திருவாக்கு.

"குலந்தாங்கு சாதிகள் நாலிலும் கீழ் இழிந்து, எத்தனை
நலந்தான் இலாத சண்டாள சண்டாளர்கள் ஆகிலும்
வலம்தாங்கு சக்கரத்து அண்ணல், மணிவண்ணற்கு ஆள்
கலந்தார் அடியார் தம், அடியார் எம் அடிகளே" [என்றுஉள்

என்பது நம்மாழ்வார் திருவாய்மொழி.

இராமாநுஜர், அனைவர்க்கும் அஷ்டாட்சரத்தை உபதேசித்து, எல்லோரையும் வைணவராக்கிச் சாதி பேதத்தை ஒழிக்க முயன்றார். சமயத் தலைவர்களுக்குப் பின்னே தோன்றிய கம்பன் சாதி வேற்றுமை ஒழிய எல்லோர்க்கும் கல்வி வேண்டும் என்று கூறினான். எல்லோர்க்கும் எல்லாச் செல்வமும் வேண்டும் என்று உரைத்தான்.

"கல்லாது நிற்பார் பிறர் இன்மையின் கல்வி முற்ற
வல்லாரும் இல்லை; அவை வல்லர் அல்லாரும் இல்லை"

"எல்லாரும் எல்லாச் செல்வமும் எய்தலாலே
இல்லாரும் இல்லை; உடையார்களும் இல்லை"

என்பன கம்பன் கூறியவை.

இவ்வாறு சாதி வேற்றுமை ஒழிவதற்கு ஒவ்வொருவரும் ஒவ்வொரு துறையிலே முயன்றனர்.

சித்தர் நூல்கள் என்று வழங்கும் பாடல்களிலே சாதி வேற்றுமையைக் கடுமையாகச் சாடியிருக்கின்றார்கள்.

இன்றும் பலர், இத்தீமையை ஒழிக்க முயன்றுகொண்டு தான் இருக்கின்றனர். ஆனால் இன்னும் ஒழிந்தபாடில்லை.

சாதியை ஒழிப்பதற்குக் கம்பன் காட்டிய வழியைத்தான், நமது காலத்துக் கவிஞர் பாரதியாரும் கூறியுள்ளார்.

" வாழி கல்வி, செல்வம் எய்தி
வாழ்வம் இந்த நாட்டிலே"

என்பது அவர் கூறியிருப்பது.

எல்லோரும் கல்விபெற்று, வாழ்க்கை வசதியும் பெற்றுச் சமநிலையடைந்தால் சாதி தானே மறைந்துவிடும் என்பதே இன்றைய அறிஞர்களின் கொள்கை. இவ்வுண்மையை மறந்து, பிறர்மீது வசைபாடிக்கொண்டிருப்பதால் சாதி வேற்றுமை ஒழிந்துவிடாது.

முடிவுரை.

இதுவரையிலும் கூறியவற்றால் சாதி என்னும் சொல் தமிழ்ச் சொல் அன்று எனக் கண்டோம்.

தொழிற் பிரிவு காரணமாகப் பிரிந்த வகுப்புப் பிரிவுதான் நாளடைவில் சாதிப்பிரிவாக ஆயிற்று.

உழவுத் தொழிலில் முன்னேறியுள்ள மக்களிடந்தான் தொழில் வளர்ச்சியும், தொழிற் பிரிவுகளும் உண்டாகும். தமிழர்கள் மிகப் பழங்காலத்திலேயே-ஆரியர்கள் இந்நாட்டிற்கு வரும் முன்பே—உழவிலும், தொழிலிலும், அரசியலிலும் சிறந்திருந்தனர். அவர்களிடையே அந்தணர், அரசர், வணிகர், வேளாளர் என்ற பிரிவுகள் இருந்தன.

ஆரியர்கள் இந்நாட்டில் புகும்போது அவர்களிடம் வகுப்புப் பிரிவுகள் இல்லை. ஒரே கும்பலாக வாழ்ந்த அவர்களிடம் வகுப்புப் பிரிவுகள் இருந்திருக்க முடியாது.

தமிழர்களிடம், இருந்த பிரிவுகளைப் பார்த்த பிறகே அதை அவர்கள் பின்பற்றினர். தங்கள் நூல்களில் எழுதிவைத்தனர். இப்பிரிவுதான் நாளடைவில் சாதி வேற்றுமையாக—பிறப்பிலே வேற்றுமை உண்டு என்பதாக—நிலைபெற்றுவிட்டது.

பிறப்பிலே உயர்வு தாழ்வு என்ற சாதிப்பிரிவின் தீமையைப் பண்டைத் தமிழர்களே கண்டித்தனர். அவ்வேற்றுமையைப் போக்கப் பல வழிகளில் முயன்றனர்.

சாதி வேற்றுமையைப் போக்க இன்றுவரையிலும் முயன்ற முயற்சிகள் பயன்தரவில்லை. இன்றும் சாதி வேற்றுமையை ஒழிக்கும் முயற்சி நடைபெற்றுக்கொண்டுதான் இருக்கின்றது. சாதி வேற்றுமை ஒழியவேண்டும் என்பதிலே கருத்து வேற்றுமையில்லை; மக்கள் நல்வாழ்விலே கருத்துள்ளவர்கள்—கவலையுள்ளவர்கள்—எல்லோரும் இதை ஒப்புக்கொள்ளுகின்றனர்.

# சமணரும் சிற்றண்ணல் வாயில் குடைதளியும்.

வித்துவான். சி. கோவிந்தராசன்,
(விரிவுரையாளர், கரந்தைப் புலவர் கல்லூரி.)

[இக்கட்டுரை தமிழகத்தில் வளர்ச்சியடைந்த சமணரின் வரலாற்றுக் குறிப்புடன், கி. பி. ஏழாம் நூற்றுண்டின் இடைக்காலத்தில் சிற்றண்ணல் வாயிற் குன்றில் வாழ்ந்த சமண சிற்பிகளாலேயே இங்குள்ள குகைக்கோயில் குடைந்தெடுக்கப்பட்டதென்பதையும், இத்தளியில் இப்பொழுது காணப் படும் சிறந்த ஓவியங்கள் கி. பி. ஒன்பதாம் நூற்றுண்டின் இடைப்பகுதியில் எழுந்த பாண்டியர்கால ஓவியங்கள் என்பதையும் எடுத்துரைப்பதாகும்.]

கிறித்து பிறப்பதற்கு ஐந்து நூற்றுண்டுகட்கு முன்னர் வட இந்தியாவில் தோன்றிய பௌத்த சமண சமயங்கள் விரைவில் தழைத்தோங்கி வைதிக சமயச் சிறப்பை மறைக்கலாயின. பேரரசன் அசோகனுல் பெருமையுடன் பேணப்பட்டபொழுது பௌத்தமதம் அவ்வரசனுணையால் கிழக்கு ஆசியா முழுவதும் பரவத் தொடங் கியது. அக்காலத்தில் சமண சமயமும் ஆரிய மன்னர்களின் ஆதரவைப்பெற்று மிகுதியாகப் பரவிவந்தது. எனவே வைதிக சமயமாம் பொய்கையை மறைத்து நிற்கும் தாமரையும் ஆம்பலும் போன்று இரு சமயங்களும் நாடெங்கணும் படர்ந்து செழித்து மலர்ந்து விளங்கின. இவ்வாறு அரசராலும் மக்களாலும் மதிக்கப் பெற்ற பௌத்த சமண வளர்ச்சியில் தமிழகமும் தலைசிறந்திருந்த தென்பதைப் பண்டைத் தமிழிலக்கியங்களால் நன்கு அறியலாம். இந் நிலையில் கி. பி. இரண்டாம் நூற்றுண்டளவினதாக வைதிக சமயம் நிலையற்றுக்கிடந்தது. பின்னர் ஆரிய மன்னர்வழியில் தோன்றிய வாகட மன்னரது ஆர்வத்தால் வடநாட்டில் வைதிக சமயம் புதிய வேகம்கொண்டது. அதனுல் பௌத்த சமண சமயங்கள் தம் நிலை யில் தாழத் தொடங்கின. சமண திகம்பரர்களையும், பௌத்த பிட்சுக் களையும் மக்கள் வெறுக்கத்தொடங்கினர். பல நூற்றுண்டுகளாகச் செல்வாக்குடன் திகழ்ந்து வாழ்ந்த பௌத்த சமண சமயங்கள் போற்றுவாரின்றித் தளர்ச்சியுறும் நிலையேற்பட்டது. அந்நிலையில் அச்சமயத் துறவிகள் அங்கிருந்தும் தக்காணத்திலும், தமிழகத்திலும் புகுந்து வாழ்வாராயினர். தாம் மேற்கொண்டொழுகிய தவத்திற்கும் அமைதிக்கும், கலை வளர்ச்சிக்கும் இலக்கான காடு மலைகளை நாடிய துறவிகளிற் சிலர், எல்லோரா, அஜந்தா குன்றுகளில் அமைந்த இயற்கைக் குகைகளில் வாழ்வாராயினர். தமிழகத்தில் நுழைந்த சமண முனிவர்கள் ஆங்காங்குள்ள காடுகளிலும் மலைக் குகைகளிலும் வாழ்ந்துவந்தனர். நாளடைவில் தாம் வாழ்ந்துவந்த குகைகளைப் பெரியதாக்கிக்கொண்டதோடு ஆங்காங்குப் பள்ளிகளையும் பாழிகளை யும் சமய இலைச்சினையாக அமைத்துவந்தனர்.

இவ்வாறு பௌத்த சமண சமயங்கள் தென்னுட்டிற் புகுந்து பரவிய காலம் கி. பி. இரண்டாம் நூற்றுண்டிற்குமேல் ஆரும் நூற் ருண்டின் அளவினதாக இருத்தல்வேண்டும். தென்னுடுபோந்த சமணர்கள் முதலில்வந்து தங்கிய இடம் மைசூர் நாட்டிலுள்ள சிரவணவேள்குளம் என்ற பகுதியாகும். இப்பகுதியைத் தன்னகத் துக்கொண்ட கன்னட நாட்டில் வாழ்ந்த களப்பிரர் என்போர்.

கி. பி. மூன்றும் நூற்றுண்டின் இடைப் பகுதியில் தமிழகத்துள் பாண்டிநாட்டைக் கைப்பற்றினர்கள். அவர்களது ஆட்சியால் மதுரையிலிருந்த தமிழ்ச் சங்கம் சிதைந்தமையும் தமிழ்ப் பழங் கொள்கையாகிய சிவ வழிபாடு முதலியன சிதைந்தமையும் புறச் சமயங்களாகிய பௌத்தமும் சமணமும் பெருமை எய்தினமையும் யாவரும் அறிந்த வரலாற்றுண்மைகளாம். கடுங்கோன் என்னும் பாண்டியன் தோன்றிக் களப்பிரரது ஆட்சியை ஒழித்த பின்னர்க் கி. பி. ஆறும் நூற்றுண்டின் பிற்பகுதியில் தமிழ் மொழியும், தமிழர் தொன்மை வழிபாட்டு முறையும் வளர்ச்சியடையத் தொடங்கின. இக்காலப் பகுதியில் சைவ வைணவச் சமயங்கள் சிறப்பாகவும் பௌத்த சமண சமயங்கள் ஆங்காங்குப் பரவியும் நிலவிவந்தன. கி. பி ஏழாம் நூற்றுண்டின் முற்பகுதியில் ஆண்ட பல்லவ மன்னனுன முதல் மகேந்திரவர்மனது ஆட்சிககாலத்தில் தமிழகத்தில் சமயப் பூசல்கள் அரும்பிவந்தன. நாளடைவில் அவற்றுல் ஒன்றுக்கொன்று பகைமை முற்றத் தொடங்கியது. அரசர்களின் செல்வாக்குப்பெற்ற சமயமே அவ்வப்பகுதியில் தலைதூக்கி நின்றது. அக்காலத்தில் அந்தந்த மதத்திற்குரிய தலைவர்களும் அடியார்களும் மக்களிடையே மதிப்புடன் பழகுவாராயினர். முதலிற் சமணத்தைச் சார்ந்து மீண்டும் சைவத்திற்குத் திரும்பிய தவச் செல்வராகிய திருநாவுக்கரசரது அருட் சார்பால் மகேந்திரபல்லவன் சைவனுனன். முன்பு சமணச் சார்பிலிருந்து சைவர்க்குத் தீங்கிழைத்த அவன் சைவனுனவுடன் சமணப் பள்ளிகளையும், பாழிகளையும் அழித்தான். அவற்றைக்கொண்டு திருவதிகையில் குணதர ஈச்சரம் என்று தன் பெயரால் சிவன் கோயிலும் கட்டினுன். சிரா என்னும் சமண முனிவரால் திகழ்ந்த சிராப்பள்ளியைச் சிவனுக்குரியதாக்கினுன். சமணப் பயிரை வளர்த்த பல்லவநாடு அதைச் சாய்த்தொழிக்கத் தொடங்கியது. இந்நிலை சமணர்கட்குப் பெரும் தொல்லையாக அமைந்தது.

கி. பி. 640 முதல் 680 வரையில் பாண்டிய நாட்டை ஆண்ட மன்னன் மாறவர்மன் அரிகேசரி யாவன். இவனைச் சுந்தர பாண்டியனென்றும், கூன்பாண்டியனென்றும் கூறுவர். மதுரைக்குத் தெற்கே ஐந்து கல் தொலைவிலுள்ள ஆனைமலை முதலிய எண் பெருங் குன்றங்களை யிடமாகக்கொண்டு பெருகிய சமணர்கள் தமது கலைவன்மையினுல் பாண்டியனுடைய ஆதரவையும் பெற்று வாழ்வாராயினர். அத்துடன் பாண்டியனையும் சமணனுக்கினர். இத்திறத்தால் சமணருக்குத் தக்க பாதுகாப்பு ஏற்படலாயிற்று. திகம்பர சமணர்கள் வாழ்ந்த மலையில் அவர்

களுடைய வழிபாட்டிற்கு ஏற்பத் தீர்த்தங்கரர்களின் உருவங்களோடு, கற்படுக்கைகளும் சமணச் சிற்பிகளால் அமைக்கப் பெற்றன. இத்தகு நிகழ்ச்சிகளால் ஒரு மலை 'சமணர் மலை' என்னும் சிறப்புப் பெயர் பெற்றது.

இந்நிலையில் மதுரைக்கு எழுந்தருளிய திருஞான சம்பந்தரின் சைவ நலத்தால் பாண்டியன் சைவனானதும், அந்நாட்டில் சமண சமயம் மதிப்பிழந்தமையும் வரலாறு அறிந்ததேயாம்.

அக்காலத்தில் சோழநாட்டின் பெரும்பகுதி ஒருகால் பாண்டியராட்சியிலும், ஒருகால் பல்லவராட்சியிலும் கைமாறி நின்று தத்தளித்தது. சங்ககாலந்தொட்டுக் குன்றின்மேல் இட்ட விளக்கெனத் திகழ்ந்த சோழப் பேரரசு குடத்தினுள் இட்ட விளக்கென மங்கி ஆயிரத்தளியளவில் அடங்கிக்கிடந்தது. பாலைவனத்தில் நிற்கும் சோலைகளைப்போல, புதுக்கோட்டைச் சீமையைச் சார்ந்த கொடும்பை (கொடும்பாளூர்) வெள்ளனூர் ஆகிய பகுதியைக் கோனாடு என்னும் பெயருடன் இருக்குவேளிர் என்னும் குறுநில மன்னர்கள் பல்லவப் பேரரசின் கீழிருந்து ஆண்டுவந்தனர். பல்லவ, பாண்டிய நாடுகளில் வாழ்விடமில்லாது அலைந்த சமணத் துறவிகள் பாண்டியநாட்டிற்கும், பல்லவர்கட்கு உட்பட்ட சோணாட்டிற்கும் எல்லையாக அமைந்துள்ள கோனாட்டின் காடுகளிலும், மலைகளிலும், குகைகளிலும் முன்னர் அருகி வாழ்ந்த அருகரோடு இணைந்து வாழ்வாராயினர். இவ்வாறு கோனாட்டினுள் தங்கிய சமணர் இருக்குவேளிரின் ஆதரவைப் பெற்றதோடு, இப்பொழுது செந்தலை என்று அழைக்கப்படும் சந்திரலேகை என்னும் ஊரைத் தலைமை யிடமாகக்கொண்டு தஞ்சை முதலிய பகுதிகளைப் பல்லவரின் கீழிருந்து ஆண்ட முத்தரைய மன்னர்களாலும் மதிக்கப்பெற்றனர்.

தமிழகத்திற் பெருகிய சமண சமயம், பல்வேறுபட்ட ஆறுகள் வந்தடையும் ஆழ்கடல் போன்றிருந்தது. ஆதலினால் பலவகை மரபுகளினின்றும் சமணமதக் கொள்கைகளை மேற்கொண்டு வந்தடைந்தவர்களே சமணத் துறவிகளாகவும், சமணர்களாகவும் இருந்தனர். அவர்களுள் சிலர் சிற்பக்கலை வல்லாரும் ஓவியத்துறையிற் சிறந்தாரும், இயற்புலவருமாய் இருந்தனர். இத்துறவிகள் மேற்கொண்டொழுகிய கற்றல், ஓதுதல், தவமியற்றல் ஆகிய நற்பண்புகளுடன் குலத்தொழிலையும் வளர்த்து வந்தனர்.

இவ்வாறு சேற்றுப்பாதையில் சகடத்தை ஏற்று நடக்கும் எருதுகளின் செயலை ஒப்ப, இருக்குவேளிரின் ஆதரவில்

கோனாட்டின் உட்பகுதியினுள் உள்ள சிற்றண்ணல்வாயிற் குன்றி னுள்ள இயற்கைக் குகைகளில் வாழ்க்கையை மேற்கொண்ட சமணருடைய நாட்கள் மெதுவாகக் கழிந்தன. மலைகளிலே தக்க இடங்களில் சிற்பிகளின் உளி ஓசை எழுந்தது. சமண தீர்த்தங்கரர்களின் உருவங்களும் அமைந்தன. சமண ஓவியரின் கைவன்மை குகைக் கோயில் முழுவதையும் அழகு செய்தது. அக்காலத்தில் வாழ்ந்த சிற்பிகள் சமண முனிவர்கள் உண்ணு நோன்பிருந்து உயிர்துறத்தற்குரிய கற்படுக்கைகளை மலைமேல் அமைத்ததுடன் அம் மலையைக் குடைந்து கோயில் அமைத்து, அதைச் சிறந்த ஓவியங்களாலும் அழகுபடுத்தினர் அவர்கள் அமைத்த கலைக்கோயிலே சிற்றண்ணல்வாயில் குடைதளியாகும். இக்கோயில் அமைக்கப்பெற்ற காலம் கி. பி. ஏழாம் நூற்றாண்டின் இடைப்பகுதியாகும்.

சமண முனிவர்கள் கோனாட்டினுள்ளும் முத்தரையராட்சிப் பகுதியினுள்ளும் தங்கியிருந்தபோது, பாண்டியநாடு கி.பி.765க்கு மேல் நெடுஞ்சடையன் பராந்தகன் ஆட்சிக்குட்பட்டிருந்தது. இப்பாண்டியன் வைணவத்தை உயிரெனக்கொண்டவன். இவன் காலத்தில் இருக்குவேளிரும் அவரது ஆதரவால் சற்று நாட்டில் உலவிய சமணரும் தலையெடுக்கவில்லை. இப்பாண்டியனுக்குப் பிறகு கி. பி. 792-க்கு மேல் அரசுரிமைகொண்ட முதலாம் வரகுணமகாராசனே சைவத்தை மேற்கொண்டவனாக விளங் கினான். எனவே இவனுடைய ஆட்சிக்காலமாகிய கி. பி. 835 வரையிலும் சமண சமயம் ஒடுங்கிவரத் தொடங்கியது. இவ்வாறு கி. பி. ஏழாம் நூற்றாண்டின் பிற்பகுதிமுதல் இரண்டு நூற்றாண் டளவினதாக வளர்ச்சியின்றிக் குகைகளிலும், பள்ளிகளிலும் ஒடுங்கிக்கிடந்த சமணரின் தொகை மிகவும் அருகிவரலாயிற்று. அவர்களின் கலைச் சின்னங்களாக எழுந்த பள்ளிகளும், ஓவியங் களும் காப்பவரற்றுப் பாழடைந்து வந்தன. சிற்றண்ணல்வாயில் கலைக்கோயிலும் கதிரவனின் வெம்மையாலும், மழையாலும் பழுதடைந்து வந்தது.

இங்ஙிலையில் கி. பி. ஒன்பதாம் நூற்றாண்டின் இடைப்பகுதி யில் சிறு பொறியாக அணையாது நின்ற சமணத்திற்கு ஆதரவுக் காற்று வீசத் தொடங்கியது. ஆயிரந்தளியில் பல்லவரின்கீழ் அடங்கி இருந்த சோழன் விசயாலயன் காலம் பார்த்து முத்தரை யரின் காப்பிலிருந்த தஞ்சையைக் கைப்பற்றினான். இக்காலம் கி. பி. 846 என்று திரு. சதாசிவ பண்டாரத்தாரவர்கள் தேற்ற மொடு கூறுவர். திறமையுடன் கொண்ட தஞ்சையிலிருந்து முன்னேற்றமடைந்த இம்மன்னவன் சோழப் பேரரசைப் பல்லவர்

பிடியினின்றும் விடுவித்துத் தனியரசாக்கினன். இம்மன்னன் சைவநலச் செல்வனயினும், பிறசமயங்களை வெறுக்காது அரசியல் நடத்தும் அருந்தன்மை உடையவனக இருந்தான். எனவே இவனது ஆட்சியில் செந்தலைபோன்ற பகுதியிலிருந்த சமணர் தலையெடுக்கத் தொடங்கினர். இவ்வாருகச் சோழ அரசியலில் சமயங்கள் தளிர்க்கத் தொடங்கியபோது, பாண்டியநாட்டைச் சீமாறன் சீவல்லபன் என்னும் பாண்டியன் ஆண்டுவந்தான். இம்மன்னன் கலையார்வம் மிக்குள்ளவன். சிறந்த வீரன். பல்லவ ராட்சிக்குட்பட்டிருந்த சோழநாட்டின் பகுதிகளைக் கைக் கொள்ளக்கருதிப் பல்லவரோடு குடமூக்கிலும் (குடந்தை) அரிசிற் கரையிலும் போரிட்டவன். இம்மன்னன் மதுரையைச் சார்ந்த சமணக் குன்றில் எஞ்சியவராக வாழ்ந்த சமணரின் கலை வன்மைக்கு உளங்கனிந்தவன். இவன் சமணத்துறவியாகிய மதுரையாசிரியர் இளங்கௌதமனர் என்பாரிடம் மிக்கப் பற்றுள்ளவன். அரசனுடைய அன்பினைப் பெற்றிருந்த அம்முனிவர் பாண்டியனுக்குச் சிற்றண்ணல்வாயிலில் பாழடைந்துவரும் கலைக் கோயிலின் நிலையினைக் காலம்பார்த்து உணர்த்தினர். கலைஉள்ளமும் அச்சமண முனிவரிடம் மதிப்பும் பெற்றிருந்த சீமாறன் சிற்றண்ணல்வாயில் குகைக் கோயிலையும் சமணத் துறவிகளாம் கலைஞரையும் காண விரும்பினன். சிற்றண்ணல்வாயில் மலைக்குத் தன் தேவியுடனும் பரிவாரங்களோடும் வந்தடைந்தான். கோயிலாக விளங்கிய சமணர் குடைதளியைக் கண்ணுற்ருன். அதன் பாழடைந்த நிலைக்கு மிகவும் இரங்கினன். எனவே சிற்றண்ணல் வாயிலில் அருகிவாழ்ந்த சமணருக்கு ஆதரவு கிடைப்பதாயிற்று. இக் காலக்காற்றைக் கடிதிற் பயன்படுத்தினர். உடன்நின்ற மதுரையாசிரியர் இளங்கௌதமனர். மன்னனின் ஆதரவை வேண்டினர். சமணரின் கலைவன்மையிலும் புலமையிலும் கருத்தூன்றிய சீமாற சீவல்லப பாண்டியனுடைய ஆணையின்படி மதுரை ஆசிரியருடைய கண்காணிப்பின்கீழ் சிற்றண்ணல்வாயில் குடைதளியின் அர்த்தமண்டபம் சீர்செய்யப்பெற்றது. குகைக் கோயில் முழுவதும் புதிய காரைப்பூச்சு பூசப்பட்டது. அதன் மீது ஓவியக் கலைஞரின் கைத்திறனுல் இன்று காணப்படும் ஓவியங்கள் ஒளிர்வதாயின. இவ்வழகிய ஓவியங்கள் மழை வெயில் முதலிய பருவநிலைகளால் அழியாதிருக்கும் பொருட்டு முக மண்டபமொன்றும் எடுக்கப்பட்டது. இந்நிகழ்ச்சியை விளக்கும் கல்வெட்டொன்றும் இக்குகைக் கோயிலின் தென்புற முகப்புப் பாறையில் வெட்டப்பட்டது. அக்கல்வெட்டில் " பார்முழுதாண்ட பஞ்சவர்குலமுதல் ஆர்கெழு வைவேல் அவனிய சேகரன் சீர்கெழு செங்கோல் சீவல்லவன் " என்று சிறப்பிக்கப்பட்டான்

பாண்டியன். பாண்டியன் சீமாற சீவல்லபனின் நினைவுச்சின்ன மாக ஓவியமும் எழுதப்பட்டது.

முதல் மகேந்திரவர்மனது ஆட்சியில் குப்த, வாகாடகத் துறையில் பெரிதும் பயிற்சியுள்ள சிற்பக்கலைவல்லுநரின் மாண வர்கள் பலர் சிறப்புற வாழ்ந்தனர். அவர்கள் கையாண்டுவந்த தனிச் சிறப்புடைய அமைப்போடு கூடிய சின்னங்களே பல்லவ னது முயற்சியால் பல்லவநாட்டில், பல்லவபுரம், தளவானூர், மாமண்டூர் முதலிய இடங்களில் குடைதளிகளாகத் தோன்றின.

இக்கருத்தினைப் பல்லவர் வரலாற்றை வரையறைப்படுத்திய துப்ரேல் பெருமகனார், "கிருஷ்ணையாற்றங்கரையில் விநுகொண் டாவைத் தலைநகரமாகக்கொண்டு கி. பி. 450-620 வரை ஆண்ட விஷ்ணுகுண்டர் என்னும் மரபினர், பெசவாடா, மொகல்ராச புரம், உண்டவல்லி, சித்தநகரம் முதலிய இடங்களில் குகைக் கோயில்களை அமைத்தார்கள் என்றும் அவர்கள் நாடு கி. பி. 610-க்குப் பிறகு சாளுக்கியரிடமும் பின்னர் பல்லவரிடமும் கைப்பட்டிருந்ததென்றும், அப்பொழுது முதலாம் மகேந்திர வர்மன் அக்கலைமாட்சியைக் கண்டு மகிழ்ந்து, தன் நாட்டிலும் குகைக் கோயில்களை அமைத்தான்" என்றும் ஆராய்ந்து கூறி யுள்ளார்.

இக்கருத்திற்கேற்ப, இன்றும் சிற்ப ஓவியங்களில் சிறந் துள்ள மக்களின் கைத்திறனைக் காணுந்தோறும் இஃது இன்னார் கைத்திறனாகுமென்று கலைஞர் எளிதில் அறிந்துகொள்ளுமளவிற் குக் கலைநுட்பங்கள் அமைந்திருக்கின்றன. இம்முறையிலேயே தமக்கெனத் தனித்த நுட்பங்களைக் கையாண்ட சிற்ப வல்லுநர் கள் சமணராகவும் பிறராகவும் இருந்திருக்கக்கூடும்!

ஏழாம் நூற்றாண்டில் ஏற்பட்ட இன்னல்கட்கு இரையாகாத சமண முனிவர்கள் இருக்குவேளிரின் ஆதரவில் தமது எஞ்சிய வாழ்க்கையைச் சித்தண்ணல்வாயில் போன்ற பகுதிகளிற் கழித் தனர் என்றும், அப்பொழுது அவர்கள் தமக்கென உரிய சிற்ப நுட்பங்களுடன் வழிபாட்டிற்கென குகை முதலியவற்றை உண் டாக்கினர் என்றும் முன்னர்க் கூறினோம். எனவே பல்லவர் காலத்தில் தோன்றிய குடைவரைகளும், கற்றளிகளும், சிற்ப வோவியங்களும் கலைத்துறையாலும் கைத்திறனாலும் ஒருவழிப் பட்டு நிற்கின்றன.

ஒரே வகையான நுட்பமைந்த சிற்பம் ஒரு சிற்பியின் கைவழிவந்த திறனாகவும் அதனை ஆங்காங்கு மிளிரச் செய்விப் பவர் வேறு பல சிற்பிகளாகவும் இருக்கலாம். இம்முறையிற்றான்

பல்லவர் எழுப்பிய கற்றளிகளின் அமைப்பில் சோழன் விசயா லயனல் நாரத்தமலையில் அமைக்கப்பட்ட கற்றளி அமைந்துள்ளது என்பதை நேரிற் காணின் புலனாகும். மற்றம் முதல் இராச ராசனல் தஞ்சையில் எடுக்கப்பட்ட பெரியகோயிலின் கருவறைச் சித்திரங்கள் அஜந்தா, சிகரியா முதலிய குன்றுகளிலுள்ள குகை யோவியப் பாங்கில் எழுதப்பட்டுள்ளன என்பதும் அறியத் தக்கதாம்.

கி. பி. 835 க்குமேல் பாண்டியநாட்டை ஆண்ட அவநிப சேகர சீவல்லப பாண்டியனுடைய ஆதரவைப்பெற்ற மதுரை ஆசிரியர் இளங்கௌதமனர் என்னும் சமணத்துறவியின் முயற்சி யால் சிமாறன் காலத்தில் எழுந்த ஓவியங்களுள் குகையின் வாயிலில் நிற்கும் வலப்புறத்தூணின் எதிர்முகப்பில் பகலில் இட்ட விளக்கொளிபோல் தெரியும் ஓவியம், அரசன், அரசி, பணியாள் ஆகிய மூவரின் உருவங்களேயாம். தலையளவில் எழுதப்பட்டுள்ள இவற்றுள் இன்று அறிந்துகொள்ளும் அளவில் உள்ளவை அரசன், அரசி, போதிகையோடு கூடிய தூண் ஆகிய ஓவிய உருவங்களேயாம்.

அரசனுடைய முகத்தில் அன்பின் பெருமிதம் அமைந்து விளங்குகிறது. காதுகளில் மணிகளிழைத்த குண்டலங்கள் மாண்புடன் பொருந்தியுள்ளன. தலைக்கு அணியாக வேலைப்பாடு டன் கூடிய மணிமகுடம் காணப்படுகிறது. கண்களையும் முகத் தின் களையையும் கொண்டு கற்பனைசெய்யின் அவ்வரச உருவில் ஒருயிர்ப்பு நிற்பது நன்கு விளங்கும். இவ்வரச வுருவின் இடது தோளினை ஒட்டி அரசியின் உருவம் உள்ளது. அரசியின் கூந் தல் உச்சிக்கொண்டையாக முடியப்பட்டுள்ளது. இவ்வகையான சிகையழகைக் 'கேசபந்தம்' (சிகைக்கட்டு) என்பர். இத்தகைய தலை ஒப்பனை பண்டைத் தமிழக மகளிர்க்கே உரியது. இவ் வரசன், அரசி ஓவியங்கள் அவநிபசேகர சீவல்லப பாண்டியன், அவன் தேவி ஆகியோரின் நினைவுச் சின்னமாகும். இக்கருத் தைக் குறிப்பதற்குரிய காரணங்கள் வருமாறு:—

சமணமுனிவரைப் பழிவாங்கிய பாண்டியனின் வழித்தோன்ற லாக சீவல்லபன் இருப்பினும், சமணரது அறிவிற்கோ அன்றிக் கலைத்திறனுக்கோ மதிப்புவைத்த அவன் சமணருக்குரிய இக் குகைக் கோயிலைச் செம்மை செய்ய விழைந்ததோடு, எண் ணிக்கையில் குறைந்த சமணமுனிவருக்கும், கலைஞருக்கும் உதவி யளித்தவனுமாக இருந்திருக்கிறன். இத்தகு நன்மைதனை ஈந்த அவனுடைய எழிலுருவம் ஓவியம் வல்ல சமணர்கட்கு இலக்காகி, மதுரை ஆசிரியர் இளங்கௌதமனரின் கருத்துப்படி பாண்டிய னின் அன்பிற்கு நன்றிச்சின்னமாக எழுதப்பட்டுள்ளது எனலாம்.

குகைக் கோயிலின் அர்த்தமண்டப விதானத்திலும், உள்ளறை விதானத்திலும் தூண்களிலும் காணப்படும் காரைப்பூச்சு இரண்டு படலங்களாக உள்ளன. இரண்டாவதாகப் பூசப்பட்டுள்ள காரையின்மீதே இப்பொழுது காணப்படும் அரசன் அரசி ஓவியங்களும், தாமரைக்குளம் போன்ற சிறந்த ஓவியங்களும் எழுதப்பட்டுள்ளன. இரண்டாவதாக மேலே தெரியும் காரைப் பூச்சு சிதைந்துள்ள பகுதிகளின் அடியில் முதற் காரைப்பூச்சு தெரிகிறது. அம்முதற் காரைமீதும் ஓவியங்கள் எழுதப்பட்டுள்ளன என்பதைக் கூர்ந்து நோக்கின் நன்கு அறியலாம். இக் காரைப்பூச்சும் ஓவியமுமே குடைதளி தோன்றியபொழுது உண்டானதாம். எனவே இரண்டாவது காரைப்பூச்சு பாண்டியன் சீமாறன் காலத்தில் பூசப்பட்டதென்பது புலனாகிறது.

மற்றும், அரசன் அரசி உருவங்களுக்கு இடையே எழுதப்பட்டுள்ள தூணின் போதிகை அடுக்குச் செறிவு பாண்டியர் காலக் கற்றூண்களின் அமைப்பிற்கு ஒத்த அடையாளமாகக் காணப்படுவதாலும், குகைக் கோயிலின் நிலையை நேரிற்காணாது அதைச் செப்பனிட அரசன் முயன்றிருக்கவியலாது என்ற இயல்பாலும், சிற்றண்ணல்வாயில் போன்ற பகுதிகள் சீவல்லபன் காலத்தில் பாண்டிய நாட்டினுள் அடங்கிய பகுதியாக இருந்தாலும், மதுரை ஆசிரியர் இளங்கௌதமனாரின் முயற்சியால் பாண்டியன் அரசியுடன் சமணரின் கலைக்கோயிலைக் காண அங்கு வந்ததோடு சமணர்க்கு ஆதரவளித்ததின் நன்றிச் சின்னமாகவே அரசன், அரசி ஓவியங்கள் சமணக் கலைஞரால் எழுதப்பட்டன என்றும் கொள்ளல் இயல்பாகும். எனவே, இன்று இக் குடைதளியில் காணப்படும் ஓவியங்கள் பாண்டியன் சீமாற சீவல்லபன் காலத்தில் பாண்டியரின் பாங்கில் கி. பி. ஒன்பதாம் நூற்றாண்டின் இடைப்பகுதியில் சமண ஓவியக்கலைஞரால் எழுதப்பட்டனவாகும்.

இவ்வாறான ஓவியங்களுள் குகைக்கோயிலின் கருவறையின் விதானத்தில் எழுதப்பட்டுள்ள ஓவியம் கலைநுட்பத்துடன், சரித்திர இலைச்சினையும் கொண்டதாகும். விதான விரிப்பைப்போன்று இவ்வோவியம் எழுதப்பட்டுள்ளது. ஓரங்களில் கரைகளும், வட்டச் சதுரமான நெளிந்த தொடர்களும் ஒன்றுபோல் தவறின்றி எழுதப்பட்டுள்ளன. இவ்வாறு எழுதப்பட்டுள்ள ஓவிய அடுக்குகளைக் கண்ணறை அல்லது கோட்டறை என்பர். ஒவ்வொரு கண்ணறையின் நடுவிலும் சுவத்திகங்கள் எழுதப்பட்டுள்ளன. கூட்டல் அடையாளம் போன்ற சுவத்திகங்களின் மேற்பாதியில் எதிரிட்டு நிற்கும் இரு செங்கோணங்களிலும் புறத்திற்கொருவராக தவக்கோலத்தோடு கூடிய முனிவர்கள் உள்ளனர். கீழே

# தொல்காப்பியம்

## சேனாவரையருரை விளக்கம்.

[பண்டித. சித. நாராயணசாமி, திருவையாறு]

இசைத்தல் - ஒலித்தல். சொற்களுக்கு ஒலித்தலே நிகழ்ச்சியாதலின் மேலே " உயர்திணை யென்மனார் " என்னு நூற்பாவின்கண் இசைக்கும் என்பதற்கு நிகழும் என எழுதியவர் இங்கு ஒலிக்கும் என எழுதினர் வேறில்லை யென்க. இங்கு இசைக்கும் யென்பது பெயரெச்சம்.

இங்கு இசைக்கும் என்பதற்கு உரையாசிரியர் முன்னர் உரைத்தபடியே ' **உணர்த்தும்** ' என எழுதினர். நச்சினார்க்கினியர் ' ஒலிக்கும் ' என மாறுபட்டெழுதுகின்றனர். ஐம்பாலறிய நிகழும் என்ற வளவாலேயே ஐம்பாலை யுணர்த்து மென்பது தானே பெறப்படுதலால், ' **இசைக்கும்** ' என்பதற்கு நேரான பொருளையே சேனாவரையர் எழுதினர் என்க.

' **தோற்றம்** ' என்பது எழுவாயாக நில்லாமல் ஏழாம் வேற்றுமை காலப் பொருள்பட நின்றமையால் ' **தாம்** ' என்பது பெயராக நிற்ற லாற்றுமையானும் யாப்பமைதிக்காக வந்ததெனக் கூறலமையானும் வழக்கின்கண் அவ்வாறு வருதலானும் " **தாமே யென்பது கட்டுரைச் சுவைபட நின்றது** " என்றனர் ' **தாமே** ' என்பதை

---

[304ஆம் பக்கத் தொடர்ச்சி]

உள்ள இரண்டு கோணங்களிலும் இரண்டு சிங்கங்கள் எழுந்து நின்று மேற்றட்டைத் தாங்கும் முறையில் எழுதப்பட்டுள்ளன. குறுக்கிட்டு நிற்கும் கோடுகளின் முனையில் வட்டமாக எழுதிய ஓரங்கள் வளைந்து வளைந்து கூடுகின்றன.

அருகதேவன் அமர்ந்துள்ள நிலையை, ' சீயஞ் சுமந்த மணியணைமேல் திகழும் சுடர் ' என்று திருக்கலம்பகமென்னும் சமண நூல் கூறும். இத்தகு மாட்சியுடன் கண்ணறை ஓவியங்களுள் எழுதப்பட்டுள்ள முனிவர்களுள் ஒருவர் மதுரைஆசிரியர் இளங் கௌதமனாராகவும் மற்றொருவர் சிற்றண்ணவாயிலில் எஞ்சிநின்ற சமண முனிவராகவும் இருக்கலாம் என்று ஊகித்தறியவியலுகின்றது.

இக்காரணங்களால், சிற்றண்ணல்வாயிலில் உள்ள குடைதளி சமணக் கலைஞரால் குடையப்பட்டதென்பதையும், இப்பொழுது அத்தளியிற் காணும் ஓவியங்கள் கி. பி. ஒன்பதாம் நூற்றாண்டின் இடைப்பகுதியில் ஆண்ட பாண்டியன் சீமாற சீவல்லபன் காலத்தில் எழுதப்பட்டன என்பதையும் உணரலாம். மேலும் இதுபற்றி ஆராய்ச்சியாளர்கள் முயற்சி மேற்கொள்ள வேண்டுகிறேன்.

ஒரே அசை நிலையாகக் கொண்டனர்; ஒரு சொல்லாகவே நின் றின்புறுத்தலின் என்க. தாம், ஏ எனப்பிரித்திலர்.

விகுதிகள் எல்லாம் இடைச்சொற்களாதலின் 'மார்' என்ப தொழித்த பத்தும் ஒற்றும் உயிர்மெய்யுமாகிய எழுத்தாகப் புலப் படுதலின் எழுத்தென்றாராயினும் எழுத்தின் வேறாகாத (ஒருபுடை யொற்றுமையுடைய) சொல்லையே குறித்தன ரென்க; மார் என்பது தனி எழுத்தாகாமையின், அன்றிச் சொல்லாகிய உறுப்பியுடன் ஒன்றுபட்டவற்றிற்கங்கமாய் நிற்புழி அவைதிணையும் பாலுமுணர்த்து மன்றிப் பிரிந்த விடத்துணர்த்த மாட்டா. உணர்த்தாத நிலைக் கண் அங்கமாவதற் கேற்புடையனவாக இருப்பினும் எழுத்தின் றன்மையே பெறுதலின் எழுத்தென்றல் சாலுமெனக் குறிக்க அங்ஙனங் கூறினர் (பதினோரெழுத்து மென்றனர்) எனினுமாம்.

இவ்வீறுகள் பெயரொடு வருமிடத்து குறித்தபடி வராமல் அதாவது உயர்திணைக் கோதியது அஃறிணைக்கண்ணு மாறி வருத லால் "**வினையொடு வரும்**" என்றனர் என்பார் "**இவை பெய ரொடு வருவழித்திரி பின்றிப்பால் விளக்காமையின் வினை யொடு வருமென்றார்**" என்றனர்.

திரிபின்றி - மாறுபடுதலின்றி. மாறுபடுதல் - ஒரு படித்தாக நில்லாமை. "**கடுவன் மூலன்**" என அன்ஈறு உயர்திணைக்கே வராமல் பெயரின்கண் அஃறிணைக் கண்ணும் வருதல் காண்க. இங்ஙனம் வருதலே திரிபாம் என்க.

(௰௧) "**வினையிற்றோன்றும்........தம் மரபினவே**"

"ஒருதிணைச் சொல்.........வழுக்காக்கின்றது" என்னுந் தொடர்புடைய தொடரானது,

மேலே நின்ற நூற்பாக்கள், சொற்கள், திணைவகையால் இரு வகையாகவும் பால்வகையால் ஐவகையாகவும் ஈற்று வகையால் பதினோரு வகையாகவும் நிகழுமெனவும், அவ்வீறுகள் வினைச் சொற்களின் கண்ணேயே பிறழாது வருமெனவும் அவ்வினைகளும் படர்க்கை வினைகளாகவே யிருக்குமெனவும் பெயர்ச் சொற்களின் கண்ணே அவ்வீறுகள் பிறழாதும் பிறழ்ந்தும் வருமெனவும் வெளிப் படையாகவும் குறிப்பாகவு முணர்த்தின. இனிவரு நூற்பாக்கள் உணர்த்துவதென்னையென எழும் வினாவிற்கு, இந் நூற்பா முதலாக இவ் வோத்திலுள்ள நூற்பாக்கள் வழுக்காத்தலைத் தெரிவிக்கின்றன என விடைகூறப் புகுந்து மேலும் வினாக்களெழாத வண்ணம் 'வழு' என்பது இன்னது என்றறியும்படி அது இன்ன தன்மைகளால் இத் துணை வகைப்படு மெனவும் வழுக்காத்தல் என்பது இத்துணை வகையாகும் அவற்றின் பொருளிவை யெனவும் விளக்குகின்றனர் எனக் குறிப்பிடுகின்றதென்க.

"ஈண்டுப் பெயரென்றது பொருளை" என்பதுமேல் "இரு திணை மருங்கின்" என்னு நூற்பாவில் "**வினையொடு**" என்பது

வினைச் சொல்லொடு எனப்பொருள்கொள்ள நிற்றல் போல ஈண்டு "வினையிற் றோன்றும் பெயரிற் றோன்றும்" என்புழி வினைச் சொல்லிற் றோன்றும் பெயர்ச்சொல்லிற் றோன்றும் எனப் பொருள் கொள்ள அவை நின்றில. முறையே, தொழில்கண் தோன்றும் பொருளின்கண் தோன்றுமென, வினை யென்பது தொழிலையும் பெயர் என்பது பொருளையும் உணர நிற்கின்றன, என்கின்றது; தொழிலையும் பொருளையு நிலைக்களமாகக் கொண்டே சொற்கணிகழு மாதலின் என்க.

'வினை' யென்றாலது தொழிலையும் வினைச்சொல்லையு முணர்த்து மென்பது பொள்ளெனப் புலப்படும். பெயரென்றால் பெயர்ச் சொல்லை யுணர்த்து மென்பதே பொள்ளெனப் புலப்படு மன்றிப் பொருள் என்பதை யுணர்த்துமென்பது பொள்ளெனப் புலப்படா தாதலால், "ஈண்டுப் பெயரென்றது பொருளை," யெனப் பெயர் என்பதற்கு மட்டும் விளக்கங் கூறினர் என்க. "பெயர் நிலைக்கிளவி (தொல் - சொல் - வேற்றுமை. அ) என்னுமிட முதலியவற்றிற் 'பெயர்' என்பது பொருளை யுணர்த்தல் காண்க.

முன்னர் வந்த "தோற்றந்தாமே வினையொடு வருமே" என்பதற்கேற்ப, இங்கு 'வினையிற்றோன்று பாலறிகிளவி பெயரிற் றோன்றும் பாலறிகிளவி' யென்பனவற்றிற்கு, வினைச் சொல்லைப் பற்றிவரும் பாலறிசொல் பெயர்ச் சொல்லைப்பற்றி வரும் பாலறி சொல் எனப் பொருள்கொண்டு ஈறுகள் தம்பா லீறுகளுடன் மயங் கும் பிறபால் ஈறுகளுடன் மயங்கா எனப் பொருள் கொண்டா லென்னை? ஈறுகள் மயங்கா எனவே ஈறுகளையுடைய சொற்கள் மயங்கா என்பதுதானே போதரு மன்றே எனின், பின்னர்த் "தன்மைச் சொல்லே யஃறிணைக் கிளவி" "வியங்கோ ளெண்ணுப் பெயர்" என்பன முதலியவற்றிலெல்லாம் சொற்களைக் கூறியே வழுக்காக்கின்றமையாலும் இருதிணைச்சொற்களும் ஐம்பாற் சொற்களுமிவை யென அறிதற்கு ஈறுகள் கூறப்பட்டனவாதலால் கூறப்பட்ட அவ்விருதிணை ஐம்பாற் சொற்களே தம்மொடு மயங்கும் பிறவொடு மயங்கா எனக் கூறலே பொருத்தமாகலானும் ஈறுகள் பிறவொடு மயங்கா தம்மொடு மயங்கும் என்றுரை கூறலும் ஈறு களைக் கூறவே ஈறுகளையுடைய சொற்களும் போதருமென்பதும் பொருந்தா வென்க.

அன்றி யீறுகளை முதன்மையாகக்கொண்டு கூறின் காலம் இடம் என்னுமிவை முதலியவற்றைப்பற்றி வழுக்காத்தலையு மிந் நூற்பா மேற்கொண்டுள்ளது என்பதற்கு இடமில்லாமலும் போகு மாதலால் ஐம்பாலறிய நிகழும் வினைச் சொற்களும் பெயர்ச் சொற் களும் பிறபாற் சொற்களுடன் மயங்கா, தம்பாற் சொற்களுடன் மயங்கும் எனப் பொருளுரைத்தலே பொருந்தும்.

[தொடரும்]

246-ஆம் பக்கத் தொடர்ச்சி.

# இயற்கைக் காட்சி.

பண்டித, வித்வான், தி. சங்குப் புலவர்.

## அகவற் பா*

### மூட்டைப்பூச்சி.

வேட்டை நாய்போல மக்களை வெருட்டும்
மூட்டைப் பூச்சியி னியற்கையை மொழிவேன்
வீட்டின் மதில்வளை மேவி யிருக்கும்
போட்ட கட்டிலின் புழையெலா மிருக்கும்
கதவு நிலைநாற் காலி பலகணி
உதவுந் தலையணை யுள்ளெலா மிருக்கும்
வெளிச்ச மிருந்தால் வெளியே ருமல்
ஒளித்திருக் கும்விழி யுண்டோ வில்லையோ
இருட்டிலெங் கும்வெளி யேறிச் செல்லும்
திருட்டுத் தொழிலைச் செய்தே பிழைக்கும்
மடியுடன் சோர்ந்து மக்கள் படுத்துத்
தடியென வுறங்குஞ் சமயம் பார்த்து
மேல்கீழ் விரித்த போர்த்த மெல்லிய
நூல்சே ராடையி னுழைந்தங் கிருந்தே
யுடற்கண் வாய்வைத் துறிஞ்சிப் பலவிடங்
கடித்துக் குருதியைக் குடித்துச் செல்லும்
விழித்துடன் மக்கள் விளக்கை யேற்றினுற்
சுழித்தவர் விழிக்குத் தோன்ரு தொளிக்கும்
விளக்கொளி மறைந்தான் மீண்டும் வெளிவரும்
அளக்க முடியா தவைகளின் சூழ்ச்சி
உடம்பி லூர்ந்துதோ லொட்டிக் கடித்தால்
தடங்கையாற் றடவித் தம்மைப் பிடித்தே
நசுக்கிக் கொல்லுவர் நாசமா வோம்நாம்
புசிப்பிற் குயிரைப் போக்குதல் கூடுமோ
என்று சிந்தையி லெண்ணியன் ருேவவை
மென்றுகி லின்மறைந் தென்றுங் கடிப்பது
கற்றரை மேலுங் கட்டிலின் மேலும்
பொற்புறு விரிப்பும் போர்வையு மின்றி
உடுத்து முடைமற் றென்று மின்றிப்
படுத்துறங் கும்பெரு மக்களைப் பார்த்து
திரண்டுபோ யூர்ந்து சேர்ந்து கடித்தாற்
புரண்டிடி னசுங்கிப் போவோம் நாமே
என்று சூழ்ந்துமே லேரு திடைவெளி
யொன்றிய விடத்திலு முள்ளு மிருந்தே
கொள்ளை யடித்தது போலக் குருதியை
மெள்ளக் குடித்து வெளிவரு மவையே
ஆறறி வுடைய மாந்தரு மறியாக்
கூறறி விவற்றிற் குக்கொடுத் தோர்யார்

---

* 246-ஆம் பக்கம் முதல் வரியில் "உலகவியற்கை" என்று படிக்க.

### தூக்கணங்குருவி.

தூக்கணங் குருவி யினியற்கையென் சொல்வேன்
ஆக்குங் கூட்டி னமைப்பைக் காணீர்
பனைதெங் கனைய பன்மரக் கிளையின்
நுனையிற் பயிர்புன் மடலினை நுணுக்கமாய்
வாயிற் கிழித்தவ் வாயினுற் பின்னி
வாயி லிரண்டு மேல்கீழ் வகுத்து
முதலுங் கடையு முறைமுறை சுருக்கி
அதனிடை மிகவு மகல மாக்கிப்
பெருமழை பலநாட் பெய்யினுங் கூட்டில்
ஒருதுளி யேனு முள்ளிறங் காவிதம்
அருமையாய்ப் பின்னி யமைத்திருக் கின்றவோர்
பெருமையை வியந்து பேசா ரெவரே!
பஞ்சுடன் மெல்லிய பறவைச் சிறைமயிர்
கொஞ்சங் கொணர்ந்தக் கூட்டினுள் விரித்துப்
பள்ளியமைத் திருக்கும் பாங்குதா னென்னே!
நள்ளிருட் கார்கா லம்வந்து நண்ணினுல்
பாம்பு முதற்பகை வருவது பார்த்துயிர்
ஓம்புதற் காகவே யொருபாற் கூட்டின்மேற்
கொள்ளைக் களிமண் கொண்டுவந் தப்பி
மெள்ள வதன்மேன் மின்மினிப் பூச்சியைக்
கொன்றதன் வாலொளி கொணர்ந்து பதித்தே
யொன்றுந் தூண்டா விளக்கா யிலங்க
வைத்திருக் குந்தனி வனப்பைக் கண்டால்
இத்தரை மாந்தரி லெவரே வியவார்!
அத்துணை யியற்கைப் பொருள்க ளிருப்பன
அத்துணைப் பொருள்களி னியல்பெலா மறிந்த
வித்தகர் யாருளர் மேதினி மீதே
ஆதலா லவ ரவ றறிந்தன
காதலிற் கூறிக் களித்துவாழ் குவிரே.

---

## போற்றுதும்

1 செங்கதிர் போற்றுதும் செங்கதிர் போற்றுதும்
இங்குயிர் வாழ்க்கை இனிது நடந்திட
அங்கண் விசும்பொளிர்த லான்!

2 தண்டமிழ் போற்றுதும் தண்டமிழ் போற்றுதும்
கண்டென இன்சுவை தந்துநன் னெஞ்சினில்
எண்ணம் வளர்த்திட லான்!

3 தாயகம் போற்றுதும் தாயகம் போற்றுதும்
தாயெனப் பல்பொருள் தந்தெமைக் காத்திவண்
தூய அருள்பொழித லான்!

—'தமிழன்பன்'.

## "கௌடலீயம் பொருணூல்."

தொன்மையானும் (கி. மு. 322——184) சிறப்பானும் இந்தியப் பேரரசுகளில் முதன்மைபெற்ற மோரியப் பேரரசினைத் தோற்றுவித்த சந்திரகுப்த மோரியன் காலத்தில் வாழ்ந்து, அவன் அப்பேரரசினைத் தோற்றுவிக்க முழுமுதற் காரணகர்த்தராயிருந்தவராகக் கருதப் படும் சாணக்கியரால் எழுதப்பட்ட 'அர்த்த சாத்திரம்' எனும் வட மொழி நூலின் தமிழாக்கமே "கௌடலீயம் பொருணூல்" ஆகும்.

பதினைந்து பெரும் பிரிவு (அதிகாரணம்) களைக்கொண்ட இவ் வண்ணாமலைப் பல்கலைக் கழக வெளியீட்டின் முதன் மூன்று பிரிவு களைத் தமிழாக்கி விளக்கவுரை எழுதியவர் பண்டிதமணி கதிரேசஞ் செட்டியாரவர்கள் ஆவார். அவர்களுடனிருந்து பணியாற்றியும், அவர்கள் பல்கலைக் கழகத்திலிருந்து வெளிபோறிய பின்னர்த் தனியே பணியாற்றியும் எஞ்சிய பன்னிரு பகுதிகளையும் தமிழாக்கிக் குறிப் புரை எழுதிமுடித்தவர் சிரோமணி, வித்துவான் பி. ஸ்ரீ. இராமானு சாச்சாரியவர்களாவர்.

துணைவேந்தர் டி. எம். நாராயணசாமி பிள்ளையவர்களின் அணிந்துரைக்கும், பேராசிரியர் கோ. சுப்பிரமணிய பிள்ளையவர் களின் முகவுரைக்கும் அடுத்து அமைந்துள்ள திரு. கணபதி சாத்திரி யாரால் முதனூலுக்கு எழுதப்பட்ட முன்னுரையின் தமிழ் மொழி பெயர்ப்பு—இவ் வழிநூலுக்கும் சிறந்த ஒரு முன்னுரையாக அமைந் துள்ளது. சாணக்கியர், கௌடலீயர், விஷ்ணுகுப்தர் என்ற பெயர்கள் ஒருவரைத்தான் குறிப்பனவா? அந்த ஒருவர்தான் அர்த்த சாத்திரத்தை எழுதியவரா? அவர் அதைத் தானே எழுதி னாரா அல்லது தொகுத்தாரா? அவர் சந்திரகுப்தன் காலத்தில் வாழ்ந்தது உண்மைதானா? அவராலேயே பாடியமும் எழுதப்பட்டது என்பது பொருத்தமுடைத்தா? என்பன போன்ற வினாக்கள் எல் லோராலும் கேட்கப்படுவனவாகும். இவையல்லாமல் விண்டர் னிட்சு, கீத், ஜாலி என்பவர்கள் போன்ற மேலைநாட்டு அறிஞர் களாலும் விவாதிக்கப்பட்ட கருத்தாகவும் மேற்குறிப்பிட்டவை உள்ளன. இத்தகைய நடுநிலையான கேள்விகளுக்கு ஓரளவு விடை கூற முயலும் திரு. சாத்திரியவர்களின் முன்னுரை, நூலைப் படிக் கப் புகுபவர்கட்குப் பெரும் அளவு துணைபுரியக் கூடிய முறையில் அமைந்துள்ளது.

சூத்திரங்கள், அவற்றிற்குக் கௌடலீயராலேயே எழுதப்பட்ட பாடியம், ஆகியவற்றைக் கொண்ட முதனூலை அப்படியே தமிழாக்கி யிருப்பதோடுமட்டுமல்லாமல் அவற்றிற்கு அருமையான விளக் கங்கள் அடிக்குறிப்பாகத் தரப்பட்டிருப்பது வரவேற்கத் தக்கதாகும். வடநூற் கருத்துக்களுக்கு ஒத்த தமிழ்க் கருத்துக்களுள் தமிழ் இலக் கியங்களிலிருந்தும், தொல்காப்பியம், புறப்பொருள் வெண்பாமாலை போன்ற இலக்கண நூல்களிலிருந்தும் எடுத்துக் காட்டப்பட்டிருப்

பது பாராட்டிற்குரிய ஒன்று. பண்டிதமணியவர்களால் மொழிபெயர்க்கப்பட்டுள்ள முற்பகுதிகளில், தமிழ்க் கொள்கைக்கு ஒவ்வாத கருத்துக்கள் மறுக்கப்பட்டிருப்பது வரவேற்கத்தக்கதாகும். காட்டாக,

"அரசன் மூப்புடையனாக அல்லது நோயுடையனாக இருப்பின் தன் தாய்வழி உறவினர், தன் குலவழியினர், நற்குணமுடைய வேற்று மன்னர் என்னும் இவருள் ஒருவனைக் கொண்டு தன் மனைவியிடத்துப் புதல்வனை உண்டுபண்ணிக்கொள்ளலாம்"

(அதி 1. அத் 17. பிர 13)

எனும் பாடியத்துக்கு விளக்கமெழுதும் பண்டிதமணியவர்கள் "இது (மேற் கூறப்பட்டுள்ள கொள்கை) தமிழர் ஒழுக்கத்திற்கு மிகவும் மாறுபட்டதாகும். மகாபாரதத்தில் வியாசர் தாயின் கட்டளைப்படித் தம்பியர் மனைவியரோடு கூடிச் சந்ததியை உண்டு பண்ணியதும், பாண்டு மன்னன் புதல்வர்ப் பேற்றை அடைந்ததும் காணப்படுதலால் இஃது ஆரியர் கொள்கை என்பது புலனாகும் (பக். 104) என்று விளக்கியிருப்பது, தமிழ்ப் பண்பாட்டிற்குப் பண்டிதமணியவர்கள் செய்த சீரிய ஒரு தொண்டு என்று குறிப்பிடலாம்.

இம்முறை மூன்றாம் பெரும்பிரிவுக்கு (அதிகரணம்) மேல் காணப்படாதது வருத்தத்திற்குரியது. 'கபோடாபாயம்' (அதி 12. அத் 140 பிர. 7) என்று ஒரு தனிப்பிரிவு (பிரிகரணம்) வகுத்து, அதில் மாற்றரசனைக் கொல்லும் உபாயங்களைக் கூறுமுகத்தான், "தெய்வ வழிபாடு காரணமாகத் திருக்கோயில் முதலிய அற நிலையங்களிற் செல்லுங்கால் அவன்மேல் பொறிகளான் கல்வீழ்த்தல், சுவர் வீழ்த்தல் முதலான உபாயங்களைக் கையாண்டு ஒழிக்கலாம்" என்றும் "வலியுடைய பகைவனை அழகு, இளமை என்பவற்றையுடைய மகளிரை அவன்பால் அனுப்பி அம்மகளிருடன் இவ்விழைச்சு நேருதற்குரிய காலத்தில் படைக்கலத்தால் தாக்குதல், நஞ்சையருந்தச் செய்தல் என்பவற்றால் கொல்லவேண்டும்" (அதி. 13. அத். 142. பிர. 2) என்றும் கௌடலீயர் கூறும் இடங்களில் பண்டிதமணியின் முறையைக் கையாண்டிருக்கலாம்.

"கௌடம், மாலேயகம், பாரசமுத்திரகம் என மணி மூவகைப்படும்" (அதி 2. அத் 32. பிர. 11) எனும் பகுதியை விளக்கும்பொழுது 'பொதியின் மலைக்கும் கடலுக்கும் நடுவிடம் கோடி எனப் பெயர்பெறும். அங்கே உண்டாம் இரத்தினம் கௌடம்' என்றும் 'பொதியின் மலையின் ஒரு கூறு மாலை எனப்படும். அதன்கண் உண்டாம் இரத்தினம் மாலேயகம்' என்றும் குறிப்பிட்டிருப்பது மிகவும் வரவேற்கத்தக்கதாகும்.

பிற்பகுதிகளைப் பொறுத்தவரை (இராமானுசாச்சாரியார் மொழிபெயர்த்தவை) முற்பகுதிகளில் காணப்படுகிற அளவுக்கு மேற்கோள்களும் விளக்கங்களும் இல்லாவிட்டாலும், திருக்குறள், கம்பராமா

யணம், சீவக சிந்தாமணி போன்ற நூல்களிலிருந்தாவது மேற்கோள்கள் காட்டப்பட்டிருக்கின்றன என்று அமைதியடையலாம்.

இம்மொழிபெயர்ப்பால், உலகப்பேரரசியல்நூல் என்று கருதப்படும் அர்த்தசாத்திரத்தைத் தமிழ் மக்கள் அறிந்துகொள்வதற்கான வாய்ப்பை அண்ணுமலைப் பல்கலைக் கழகம் நல்கியிருக்கிறது. முத்து தோன்றுமிடங்கள் என்று குறிப்பிடப்படும் பத்து இடங்களில் நம் பொருநையாறும் பாண்டிய கபாடமும் (அதி. 2 அத். 32 பிர. 11) (பாண்டிய நாட்டிற்கு வாயிற்கதவுபோல் அமைந்த பொதியின் மலையின் ஒருபகுதி) குறிப்பிட்டிருக்கும் செய்தி தமிழர்கள் பெருமைப் பட்டுக்கொள்ளக்கூடியதாகும். இந்நூலைப் படித்த தமிழ் மக்கள், 'கௌடலீயம் படித்து எழுதப்பட்டது வள்ளுவரது அரசியல்' எனும் பொருந்தாக் கூற்றுப் பொருளற்ற ஒன்று என்பதை உணரத் தவற மாட்டார்கள். ஏனெனில் அறத்தை அடிப்படையாகக் கொண்ட வள்ளுவர் அரசியலை (Ends justify the means) "முறை பற்றிக் கவலைவேண்டா முடிவே பெரிது" எனும் சாணக்கிய அரசியலோடு எப்படி ஒப்பிடமுடியும்?

அ. இராமமூர்த்தி.

## கந்தபுராண சங்கிரகமும் விண்ணப்பமும்


[குமரகுருபரரருளியது]

## கந்தபுராணப் போற்றிக் கலிவெண்பா

ஆசிரியர் :— திரு. சம்பந்த சரணலயத் தம்பிரான்

விலை 25காசு.

பயன் குறையாமல் எத்தகு பருப்பொருளையும் நுண்ணிதாக்கி நுகரும் எண்ணத்தொடு வளர்ந்துவரும் மன்பதைக்கேற்ப அணுவைத் துளைத்துக் கடலைப் புகட்டிய வள்ளுவர் அறநூலை நீதிநெறி விளக்கமாகச் சுருக்கியருளிய குமரகுருபர அடிகள் கந்தபுராணத்தை வடித்த கந்தர் கலிவெண்பாவுள் "கந்தபுராணச் சங்கிரகமும் விண்ணப்பமும்" என்ற நூலைச் செய்தளித்தார். முன்னமொரு சம்பந்த சரணலயர் கந்தபுராணத்தைச் சுருக்கித் தந்தமைபோல முன்னையாச்சிரமத்துச் சிவக்கவிமணியாய்ச் சேக்கிழார் கருத்தை நோக்கொடு விரித்த திரு. சி. கே. சுப்பிரமணிய முதலியார் அவர்கள் பின்னுமொரு சம்பந்த சரணலயத் தம்பிரானுக வந்து கத்தபுராணப் போற்றிக் கலிவெண்பாவை ஆக்கியருளியிருக்கிருர்கள். சைவமெய்யன்பர்கள் சுருங்கிய கால, முயற்சி, அளவில் கந்தபுராணத்தைப் பயிலும் பலனை எய்த வாய்ப்பானதொரு சிறுநூலாகும் இது. இத்தொண்டு சமயத்துறையிற் போற்றத்தக்கதொன்ருகும்.



தஞ்சை வட்டம்
நாகத்தி ஐயனுர்கோவில் திருவுருவங்கள்.

இது
வித்துவான், திரு. சி. கோவிந்தராசனுரால் எடுக்கப்பட்டது.

[ பக்கம் 330 பார்க்க ]



குறிஞ்சி.

இப்புகைப்படம் இலங்கை முன்னாள் அமைச்சர், திரு சு. நடேசபிள்ளை அவர்களால் கோடைக்கானலில் எடுத்து அனுப்பப்பட்டது.